தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 57   மலர் : 5

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

முன்னேற்றம்

தமிழ்

கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு 2014 - உருத்ரோத்காரி ஆவணி
(1983 ஆகஸ்ட் — செப்டம்பர்)

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

துணர் : 57 உள்ளுறை மலர் : 5

1. ஆரியன் மாந்திய தமிழ் 193
புலவர் க. சுப்பிரமணியன், எம். ஏ., பி. எட்.

2. திரு. வி. க.-வின் இதழ்ப்பணி ... 211
நெல்லை ந. சொக்கலிங்கம், எம்.ஏ., ஏ.எம்.ஏ.,
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

3. பன்னிரு திருமுறைகள் 213
வித்துவான் பெ. கு. வரதராசன், எம்.ஏ.,
பி.ஒ.எல்., பி.டி.,

4. பாரதி கற்பனைத் திறனில் காதல் பொலிவு 222
கே. சோமசுந்தரம், பி.ஏ., பி.லி.

5. பாவேந்தரின் குடும்ப விளக்கு 231
இரா. சுப்பிரமணியன். எம்.ஏ., எம்.லிட்.,
பி.எல்., டி.எச்.இடி.

தமிழ் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 57 ❋ திருவள்ளுவர் யாண்டு — 2014 ❋ மலர் : 5

உருத்ரோத்காரி — ஆவணி

1983 ஆகஸ்ட் — செப்டம்பர்

ஆரியன் மாந்திய தமிழ்

புலவர் க. சுப்பிரமணியன், எம். ஏ., பி. எட்.,

உதவித் தலைமை ஆசிரியர்,

சமாலியா உயர்நிலைப்பள்ளி, பெரம்பூர், சென்னை.

''திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்''

என்று பாரதியார் திறமான புலமைக்கு இலக்கணம் வகுத்துள்ளார். பத்துப் பாட்டில் எட்டாவதாகிய குறிஞ்சிப் பாட்டுத் திறமான புலமைக்குச் சிறந்த இலக்கியச் சான்றாகும். ஆரிய அரசனுக்குத் தமிழறிவித்தற்காகக் கபிலர் குறிஞ்சிப் பாட்டைப் பாடினார். ஆரிய அரசன் குறிஞ்சித் தமிழை மாந்தி மகிழ்ந்தது போலவே ஆங்கிலே-யரான அறிஞர், டாக்டர். ஜி. யு, போப் அவர்களும் குறிஞ்சித் தமிழை மாந்தி மகிழ்ந்தார். இவ்விரு பேரறிஞர்களின் குறிஞ்சிப் பாட்டுத் திறனாய்வுக் குறிப்புகள் தமிழ் இலக்கியத்திற்கு அழியாப் புகழைத் தேடித் தருவனவாகும்.

கபிலரது பாட்டு:

தமிழ் இலக்கியத்தின் முப்பெரும் பிரிவுகளாகிய எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு ஆகியவற்றில் கபிலர் பாடல்கள் கலந்து விளங்குவது கொண்டே இவருடைய திறமான புலமையை அறியலாம். செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் சேரமன்னன் இவருக்கு நூறாயிரம் பொன்னும் 'நன்றா' என்னும் குன்றின் மீது நின்று பார்த்தால் கண் பார்வைக்கு அகப்படும் நிலப் பரப்பு முழுவதையும் பரிசாகத் தந்தது இவருடைய பெருமைக்குச் சான்றாகும். பாரி, பேகன் போன்ற வள்ளல்களாலும் பிற தமிழ்நாட்டு வேந்தர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர் கபிலர். இவர் குறிஞ்சித்திணை பற்றி மிகுதியாகவும் சுவையாகவும் பாடியதால் "குறிஞ்சி பாடக்" கபிலன் என்ற அடைமொழியும் இவருக்கே கிடைத்தது. பழைய உரைகளில் காணப்படும் கபிலரது பாட்டு என்னும் தொடர்மொழி இவருடைய செய்யுட்களின் இனிமையை எடுத்துக் காட்டும் என்று உ. வே. சா. அவர்கள் கபிலர் வரலாற்றில் கூறியுள்ளார். உம்மைத் தொகைக் குச் சான்றாக உரையாசிரியர்கள் கபில பரணர் என்ற தொடரைப் பயன்படுத்தியதிலிருந்து பெரும்புலவர்களாகிய கபிலரும் பரணரும் கெழுதகை நண்பர்களாக விளங்கியதையும் அறியலாம். நக்கீரர், இளங்கீரனார், நப்பசலையார், பெருங்குன்றூர் கிழார் போன்ற சிறந்த புலவர்கள் தங்கள் பாடல்களில் கபிலரின் திறமான புலமையைச் சிறப்பிக்கின்றனர். திருவள்ளுவருக்கு அடுத்த படியாகப் புலவர்கள் பலரால் பாராட்டப்படுபவர் கபிலரேயாவார். "இலக்கியப் படைப்பு இலக்கிய ஆசிரியனிடமிருந்து பிரித்தறிய முடியாததாகவே எனக்குத் தோன்றுகிறது. இலக்கியத்தைத் தனியாக என்னால் அனுபவிக்க முடியும். ஆனால் இலக்கிய ஆசிரியன் பற்றிய கணிப்பில்லாமல் இலக்கியத்தைத் திறனாய்வு செய்வது கடினமானதாகும்" என்று செயின்ட் பியூவ் (Saint Beuve) எனும் திறனாய்வாளர் கூறுவதிலிருந்து குறிஞ்சிப் பாட்டு முழுவதும் கபிலரின் ஆளுமை வெளிப்பாடே என்பதை அறியலாம்.

பாடலின் திரண்ட கருத்து:

பொய்யும் வழுவும் தோன்றாத பழந்தமிழகத்தில் தலைவன் ஒருவனுக்கும் தலைவி ஒருத்திக்கும் காதல் தோன்றியது. தோழி அவர்கள் களவொழுக்கத்திற்குத் துணை நின்றாள். தலைவன் தலைவியைக் காண இரவில் வரத் தலைப்பட்டான். காவலர், நாய், நிலவு, செவிலி முதலியோர் இடையூறு செய்தமையால் தலைவியைக் காணாது சென்றான். தலைவி பிரிவுத் துயரால்

மெலிந்து வாடினாள். அவள் நோயின் தன்மை அறியாது செவிலித் தாய் கடவுளை வணங்கியும் சோதிடரை வினவியும் பயன் இன்மையால் வருந்தினாள். தருந்த இடம், நேரம். சூழ்நிலை அறிந்து தோழி தலைவியின் காதல் வாழ்வு பற்றிய செய்தியைச் செவிலிக்கு அறத்தோடு கூறத் தொடங்கினாள்.

அன்னையே வாழ்வாயாக! தலைவியின் மையல் நோய் தனியாதது கண்டு நீ வருந்துகிறாய். அவள் நோயின் காரணம் நினக்கு வன்மையானதாக இருக்கும் என்ற கருத்தால் நான் அதனைக் கூறாமல் மறைத்துவிட்டேன். தலைவனும் நானும் செய்து கொண்ட காதல் மணம் பற்றி நினக்குக் கூறுவதால் நம் குலத்திற்குப் பழியேதும் நேராது; தலைவனுக்குத் தன்னை மணம் செய்து தர மறுத்தால் அவர்கள் ஆணையை மீறிச் செல்லாமல் அடுத்த பிறப்பிலாவது அவனை அடையத் தவம் செய்வோம் என்று தலைவி என்னிடம் கூறினாள். தினைப்புனம் காவலுக்காக எங்களை நீ அனுப்பியதால் இக்காதல் மணம் இயற்கையாக நிகழ்ந்தது. அதனை நான் உள்ளவாறு உரைக்கச் சினம் கொள்ளாது கேட்டருள வேண்டுகிறேன்.

தினைப்புனத்தில் பறவைகளை ஓட்டிக் கொண்டிருந்த போது மழை பெய்தது. மழையில் நனைந்தோம். ஆகையால் மலையிலிருந்து விழும் தூய அருவியில் நீராடினோம். பல மலர்களைக் கொய்து தொடுத்துத் தலையில் சூடி அசோக மரத்தின் நிழலில் நின்றோம். அப்போது நல் ஒழுக்கமும், அழகும், வீரமும் பொருந்திய தலைவன் ஒருவன் வேட்டையாட அங்கு வந்தான். அவனுடைய வேட்டை நாய்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டு அச்சத்தை உண்டாக்கின. தலைவன் நாய்களை அடக்கி அச்சத்தைப் போக்கினான். எங்களை நோக்கித் தன்னால் வேட்டையாடப் பட்ட விலங்கினைப் பார்த்தீர்களா என்று கேட்டான். நாங்கள் வாய் திறவாதது கண்டு வேட்டைப் பொருளைக் காட்டாவிடினும் பரவாயில்லை; வாய் திறந்து தன்னோடு ஒரு சொல் பேசக் கூடாதா என்றான்.

தினைப்புனத்தை அழித்துக் கலக்கிய யானை மீது வேடன் ஒருவன் அம்பெய்து சீழ்க்கை ஒலியால் அதனை விரட்டினான் மதங்கொண்ட யானை முழங்கிக் கொண்டு கூற்றுவனைப் போல எங்களை நோக்கி வந்தது, என்ன நேருமோ என்ற அச்சத்தால் நாணத்தையும் மறந்து தலைவி அவனைத் தழுவினாள். நாங்கள் தெய்வமுற்ற மயில் போல நடுங்கினோம். வீரம் பொருந்திய தலைமகன் யானையின் மத்தகத்தின் மீது அம்பெய்து அதனைத்

தோற்கடித்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான். எங்கள் அச்சம் மறுபடியும் தணியாமல் வெள்ளத்தால் மோதப்பட்ட வாழை போல நடுங்கினோம். தலைவன் தலைவியைப் பிரியேன், அஞ்சற்க என்று ஆறுதல் கூறித் தங்கள் களவொழுக்கத்திற்கு என் துணை வேண்டும் என்ற குறிப்போடு என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான்.

நாணமும் அச்சமும் பெருகியதால் அவன் அணைப்பிலிருந்து நீங்கிய தலைவியைத் தலைவன் விடாமல் தழுவிக் கொண்டான். மணம் செய்யாது அவளை நீங்குவேன் என்று தலைவி அஞ்சுகிறாள் போலும் என்று நினைத்தவனாகத் தலைவியை மணந்து இல்லறம் நிகழ்த்துவேன் என்று உறுதியளித்தான். முருகனை வாழ்த்தி வஞ்சினம் கூறிச் சூளுறவாகச் சுனை நீர் பருகினான். களிறு கூட்டுவித்த கூட்டத்தை அன்று பகல் முழுதும் துய்த்தான். மாலை நெருங்கியதால் எங்களை ஊருணியின் பக்கம் கொண்டு வந்து நிறுத்திச் சென்றான். சென்றவன் இரவு நேரங்களில் தலைவியைப் பார்க்க வருவதும், முடியாமல் திரும்புவதுமாக இருந்தான். அவன் ஏமாற்றத்திற்கும் அவன் வரும் வழியில் உள்ள இடையூறுகளுக்கும் வருந்தித் தலைவி கண் கலங்குகின்றாள் என்றுத் தோழி தன் தாயாகிய செவிலிக்கு அறத்தோடு நின்றாள்.

நச்சர் உரை பெறாத வரிகள்:

சினை இய வேந்தன் செல்சமம் கடுப்பத்
துனை இய மாலை துன்னுதல் காணூஉ (229-230)

(பகைவர் மீது சினம் கொண்ட வேந்தன் அவர்கள் மீது படையெடுக்க விரைந்தது போல் மாலைப் பொழுது விரைந்து நெருங்கியது.)

தமிழறிவித்தல்:

கபிலர் ஆரிய அரசனைத் தமிழறிவித்தற்காகக் குறிஞ்சிப் பாட்டைப் பாடினார். தமிழையும் தமிழர் ஆற்றலையும் இகழ்ந்துரைத்த கனக விசயர் நாட்டில் தோன்றியவனெனினும் யாழ்ப் பிரமதத்தன் தமிழின் ஆற்றலை அறிந்து வியந்தவன். ஆகையால் தமிழார்வம் அவனைத் தமிழகத்திற்கு இழுத்து வந்தது. தமிழ்க் கடலின் ஆழம் கண்ட கபிலர் ஆரிய வேந்தனுக்குத் தமிழ்க் கடலில் நீந்தக் கற்பித்தார். அவன் தமிழ்க் கடலில் நன்கு நீந்தப் பயின்ற பிறகு தமிழ்க் கடலின் ஆழம் காட்டித் தமிழ்க் கடலில் மட்டுமே காணக் கிடைக்கும் ''அன்பின் அய்யந்திணை'' என்னும் முத்தினைக் குறிஞ்சிப் பாட்டின்

வாயிலாக எடுத்துக் தந்தார். குறிஞ்சிப் பாட்டின் இறுதியில் காணப்படும் தமிழறிவித்தல் என்ற தொடருக்குத் தமிழருக்கே உரிய தனிச் சிறப்புடைய களவொழுக்கம் பற்றி அறிவித்தல் என்றே ஆராய்ச்சியாளர்கள் பொருள் வரையறை செய்வர். தமிழர் என்னும் சொல் காதல் ஒழுக்கமாகிய களவினைக் குறிப்பதைச் சங்க இலக்கியங்களில் காணலாம். தமிழ் மொழியின் சிறப்பினை அறிய விருப்பினவனுக்குத் தமுழுக்கே உரிய சிறப்பினையும் கபிலர் எடுத்துக் காட்டினார்.

"அகப்புறமாய் பாகுபட்டு விளங்கும் பழந்தமிழர் இலக்கியத்துள் காணப்படும் அய்ந்திணை அமைதி உலக இலக்கியம் எதுவும் காணாத சிறப்பினைக் கொண்டது" என்று வங்க மொழி அறிஞர் சுன்னித் குமார் சட்டர்சி அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்திய மொழியாராய்ச்சிக் குழுவின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய போது குறிப்பிட்டுக் காட்டியது மேற்கண்ட கருத்தினை வலியுறுத்துவதேயாகும்.

ஆரியன் மாந்திய தமிழ்:

பத்துப் பாட்டுப் பதிப்பில் ஆரிய அரசன் பெயர் பிரகத்தன் என்றும், குறுந்தொகைப் பதிப்பில் யாழ்ப்பிரமதத்தன் என்றும் காணப்படுகிறது. இவ்விரு பெயர்களும் ஆரிய அரசன் ஒருவனையே குறிக்கும். குறுந்தொகைப் பதிப்பில் காணப்படும் ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன் என்னும் பெயரே முழு வடிவம் பெற்றதாக இருக்கிறது. அப்பெயரே அவன் சிறப்பு முழுவதையும் எடுத்துக் காட்டுகிறது. ஆரிய அரசன் பிரகத்தன் என்ற பெயரில் ஓசையும் சொல்லும் முழுமை பெறாததைக் கூர்ந்து நோக்கினால் அறியலாம். ஆரிய அரசனின் குறுந்தொகைப் பாடல் குறிஞ்சிப் பாட்டுப் பற்றிய பாராட்டு முறைத் திறனாய்வாக (Appreciative Criticism) அமைந்துள்ளதும் ஆராயற்பாலதாகும். "எழுதுவோருடைய பிழையால் ஒரே வகையான பெயர்கள் சில வேறு வேறாகத் தோற்றும்படி சில வேறுபாட்டோடு அமைந்திருத்தலாலும் ஓராசரியருக்குரிய சிறப்புப் பெயர் மட்டும் ஒரு செய்யுளிலும் இயற்பெயர் மட்டும் மற்றொரு செய்யுளிலும் எழுதப்பட்டு இருத்தலாலும் வேறு சில காரணங்களாலும் இத்தகைய வேறுபாடு உண்டாகி இருத்தல் கூடும். சங்க காலத்துப் புலவர் பெயர்களில் இங்ஙனம் உள்ள பிறழ்ச்சி ஆராய்ச்சியாளருக்கு மிக்க துன்பத்தை விளைவிக்கின்றது'' என்று டாக்டர் உ. வே. சா. குறுந்தொகை ஆராய்ச்சி முன்னுரையில் கூறுவதிலிருந்து இப்பெயர் வேறுபாட்டிற்குரிய காரணத்தை நன்கு அறியலாம்.

உ. வே. சா. அவர்களின் பத்துப் பாட்டுப் பாடப் பட்டோர் வரலாற்றில் ஆரிய அரசன் குறுந்தொகைப் பாடல் எண் 181 என்று பிழையாக அச்சிடப்பட்டுள்ளது. ஆரிய அரசன் பெயர் வேறுபாடு, ஏடெழுதுவோரும், அச்சுச் கோப்போரும் கவனக் குறைவாக இருந்தால், புகழ்மிக்க வரலாற்றுச் செய்தியில் புழுதி படிந்து விடும் என்று நமக்கு எச்சரிக்கை விடுக்கிறது. இரண்டு பெயர்களிலும் ஆரிய அரசன் என்ற அடைமொழி இருப்பதையும் சங்க இலக்கியத்தில் பிறிதொரு ஆரிய அரசன் பாடல் காணப்படா ததையும் நினைவில் கொள்ளவேண்டும்.

பரதவர் மகளாகிய தலைவி மயில்தோகையின் கண்களைப் போன்ற அழகுடைய தலைக் கோலம் கொண்டவள். கண்டாரைப் புன்முறுவலால் மயக்கும் கொல்லிப் பாவை அனையவள். அவள் இருக்குமிடம் சென்றதால் மாட்சிமைப்பட்ட என் நெஞ்சம் இதற்கு இது பொருந்துவது அன்று என்னும் ஆராய்ச்சி இன்றி அவள் கண் வலையில் சிக்கி அங்கேயே தங்கி விட்டது. அங்குச் செல்வோர் என்னைப் போல் அவள் கண் வலையில் தப்பாமல் அகப்படுவர். ஆகையால் அவள் வாழும் சிற்றூரின் பக்கம் ஒருவரும் போகவேண்டாம்; "தம் நெஞ்சறிவது பொய்த்தல்" சான்றோர்க்கு ஒரு போதும் இல்லை என்று காம நோயால் வருந்தும் தலைவன் தன் தோழனைப் பார்த்துக் கூறினான். காம நோயால் வருந்துதல் தலைவன் தகுதிக்குத் தகாதது என்று இடித்துரைத்த தோழனுக்குத் தலைவன் தலைவி யின் தகுதி தன் ஆற்றலையும் வென்று விட்டது என்று பதில் கூறினான். ஆரிய அரசன் பாடிய அகப்பாடலின் கருத்து இதுவேயாகும்.

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கில்லை
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கிது மாண்டது என்னாது அதன் பட்டு
ஆண்டொழிந்தன்றே மாண்டஎன் நெஞ்சம்
மயிற்கண் அன்ன மாண் முடிப்பாவை
நுண்வலைப் பரதவர் மட மகள்
கண்வலைப் படூஉம் கானலானே.

-குறுந்தொகை : 184

(அறிகரி—அறிந்த உண்மை)

இலக்கிய ஆராய்ச்சியாளர் திரு மார்க்கபந்து சர்மா அவர்கள் இப்பாட்டின் தலைவனை ஆரிய அரசனாகவும் பாங்களை அவனை ஒத்த வடமொழிப் புலவராகவும் நுண்வலைப் பரத

வனைக் கபிலராகவும் மாண்முடிப் பாவையைத் தமிழ்க் கன்னியாகவும் கொள்வார். பாங்கன் கூறுவது போல், தான் அறிவிழந்தவன் அல்ல: அய்யமிருந்தால் அவனும் அங்குச் சென்று அவள் அருமையைப் அறிந்து வரலாம் என்று தலைவன் கூறியது போல் பிரமதத்தன் பிற வடமொழிப் புலவரையும் தன்னைப் போல் தமிழினைப் பயின்று தமிழின் பெருமையை அறியத் தமிழகம் செல்லலசம் என்று கூறுவதாகப் பொருள் கொண்டு ஆரிய அரசன் தன் ஆசிரியருக்குத் தெரிவித்த நன்றியறிதலின் சிறப்பினைச் சர்மா அவர்கள் அழகாக வெளிப்படுத்தியுள்ளார். மேலும் இப்பாடல் அகத்தினை பற்றியதாகவும் கபிலர் பாடல்களில் பயின்று வரும் "கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது" என்று துறை பற்றியதாகவும் இருத்தலால் இதனை நன்றியுரைப் பாடல் என்று நிறுவுகின்றார். ஆனால் அவர் இப்பாடல் நெய்தல் திணையைச் சார்ந்ததாகக் கூறுகிறார். பாடலின் உரிப் பொருள் குறிஞ்சித்திணையைச் சேர்ந்தது என்பதனை அவர் ஒத்துக் கொண்டு பெயரளவில் நெய்தல் திணைப் பாட்டேயல்லாமல் பொருள் அளவில் குறிஞ்சிப் பாடலே என்றும் கூறுகின்றார். நெய்தலுக்குரிய கருப்பொருள் இப்பாடலில் வந்தமையே அவர் இவ்வாறு கூறக் காரணமாகும்.

''நிலம் முதலானவற்றைப் பாட்டின் முதற் பொருள், கருப்பொருள் எனக் குறித்துக் காதல் உணர்ச்சிகளையே அகப்பாட்டின் உரிப்பொருள் என முன்னோர் வகுத்தது போற்றுதற்குரியதாகும். உணர்ச்சியே வாழ்வின் அடிப்படையுமாகும். உணர்ச்சியை ஒட்டியே வாழ்க்கையின் மற்றக் கூறுகள் அமைவன. ஆதலின் கூடல் முதலியவற்றை உரிப்பொருள் எனக் கொண்டது மிகப் பொருந்துவதாகும்,'' என்று டாக்டர் மு. வ அவர்கள் (இலக்கிய மரபு:பக்.184) கூறுவதிலிருந்து ஒரு பாடலில் உள்ள உரிப்பொருள் பற்றியே அதன் திணையையும் வகுக்க வேண்டும், என்பதை அறியலாம். குறிஞ்சிப் பாட்டிற்குப் பொருள் எழுதிய நாச்சினார்க்கினியர், "இதற்குக் குறிஞ்சியென்று பெயர் கூறினார், இயற்கைப்புணர்ச்சியும் பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறுதலின், அன்றியும் முதலானும் கருவானும் குறிஞ்சிக்குரியனவே கூறுதலானும் அப்பெயர் கூறினார்'' என்று உரிப்பொருளினையே முதலாவதாகச் சிறப்பித்துள்ளார். இதில் பிறதிணைக்குரிய முதலும் கருவும் மயங்கி வந்தனவேனும் உரிப்பொருள் சிறப்புப் பற்றி இது குறிஞ்சி என்னும் பெயர் பெற்றது என்று டாக்டர் உ. வே. சா. அவர்களும் குறிஞ்சிப் பாட்டு முகவுரையில் கூறியுள்ளார்.

ஆரிய அரசன் குறுந்தொகைப் பாடலில் புணர்தல் நிமித்தம் எனும் உரிப்பொருள் காணப்படுவதால் குறிஞ்சித் திணையைச் சார்ந்தது என்று கூறுவதே பொருந்துவதாகும். இப்பாடல் தொல்பொருள் 102-ஆம் சூத்திரத்தில் காணப்படும் "நிகழ்பவை உரைப்பினும்" என்னும் விதி பற்றியதாகும். பாங்கன் கூறியவற்றை மறுத்துத் தன் நெஞ்சில் நிகழும் வருத்தங்களை அவனுக்குக் கூறிப்பாங்கனால்தான் தலைவியைக் கூட வேண்டும் என்பதைத் தலைவன் புலப்படுத்தினான் என்ற செய்தியை நச்சினார்க்கினியர் தொல்காப்பிய வுரையாலும் அறியலாம். ஆரிய அரசன் குறுந்தொகைப் பாடலை முழுவதும் ஒத்த நற்றினை 160-ஆம் செய்யுளை நச்சினார்க்கினியர் தொல்காப்பிய விதிக்குச் சான்று காட்டுகிறார்.

நயனும் நண்பும் நாணும் நன்கு உடைமையும்
பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்
நும்மினும் உடையேன் மன்னே கம்மென
எதிர்த்த தித்தி ஏரிள வன முலை
விதிர்த்து விட்டன்ன அம்நுண் சுணங்கின்
அம்பால் வகுத்த கூந்தல் செம்பொன்
திருநுதற் பொலிந்த தேம்பாய் ஓதி
முதுநீர் இலஞ்சி பூத்த குவளை
எதிர்மலர்ப் பிணையால் அன்ன இவள்
அரிமதர் மழைக்-கண் காணா ஊங்கே.

-நற்றிணை: 160

(இலஞ்சி: பொய்கை; அம்பால்: அய்ப்பகுதி; ஓதி: கூந்தல்; பாடறிந்தொகல்: உலக நடையறிந்து ஒழுகல்.)

இப்பாடலின் திணை குறிஞ்சி; துறையும் கழற்றெதிர் மறை, இப் பாடல் ஆசிரியர் பெயர் கிடைக்காதது வேதனைக்குரியதாக இருக் கிறது. ஒரு வேளை இதனையும் யாழ்ப்பிரமதத்தனே இயற்றி யிருக்கக் கூடுமோ? இப்பாடலில் மருதத்திற்குரிய பொய்கை, குவளை ஆகிய கருப்பொருள்கள் வந்துள்ளன. எனினும் இப் பாடலைக் குறிஞ்சியாகக் கொண்டது போலவே ஆரிய அரசன் பாடலையும் குறிஞ்சியாகக் கொள்ள வேண்டும். எனவே குறிஞ்சிப் பாட்டினைக் கற்றறிந்த ஆரிய அரசன் குறிஞ்சித் திணை பற்றிய பாடல் வாயிலாகத் தன் புலமையையும் திறனாய்வுக் குறிப்பையும் புலப்படுத்தியுள்ளான் என அறிதல் வேண்டும். "கபிலர் ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தனைத் தமிழின் சிறப்பு அறிவுறுத்தற்குப் பத்துப் பாட்டுள் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டுப் பாடியருளினார்.

அதனையறிந்த அவன் தமிழ் பயின்று சங்கத்தாரோடு ஒப்பப் பாடும் திறமை அடைந்தனன். அவன் பாடியது குறுந்தொகை 184-ஆம் செய்யுள்" என்று நற்றிணை உரையாசிரியர் உயர்திரு. பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் அவர்களும், ''மாணவர் பாடலும் ஆசிரியர் பாடலும் ஒத்த ஒரு பெருந்தரமாக இருக்கக் காண்கிறோம்" என்று டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களும் (தமிழ்க் காதல்: பக். 331) கூறுவன கொண்டு ஆரிய அரசன் பெயர் வேறுபாட்டுச் சிக்கலை அவிழ்க்கலாம்,

அன்பின் அய்ந்திணை எனப்படும் காதல் ஒழுக்கம்தமிழுக்கே-யுரியது என்று கபிலர் அறிவுரையைச் செவி மடுத்த ஆரிய அரசன் அதனை மனமுவந்து ஏற்றான். சான்றோர்தம் நெஞ்சறிவது பொய்த்தல் இல்லை. ஆகையால் கபிலர் வாய்மொழியின் வாய்மையை விளக்க அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கில்லை என்று தன் பாடலைத் தொடங்குகிறான். மார்க்கபந்து சர்மா அவர்கள் கூறிய புத்துரைக் கருத்தினை உட்கொண்ட பாராட்டு முறைத் திறனாய்வுப் பாடலை எழுதி முடித்தான். (''ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு'' என்று இக்குறிஞ்சிப் பாட்டிற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையின் இறுதியில் காணப்படும் குறிப்பினால் கபிலர் பெருமான் ஓர் ஆரிய அரசனுக்குத் தமிழின் மொழி நயமும் இலக்கிய மரபும் உணர்த்துவதற்காக இப்பாட்டினைப் பாடியிருக்க வேண்டும். பிற்பாடு இயனே ஒரு தமிழ்ப் புலவனாக விளங்கியிருக்கவேண்டும்- இவன் பாடிய பாடல் ஒன்று (குறு: 184) குறுந்தொகையில் காணப்படுகின்றது. (திரு புது. ச. சோமசுந்தரம், திரு பூவண்ணன் – தமிழ் இலக்கிய வரலாறு: பக், 93.)

மேனாட்டறிஞர் மாந்திய தமிழ்:

குறிஞ்சிப் பாட்டின் சிறப்பியல்புகளை ஆரிய அரசனைப் போல மேனாட்டறிஞர் டாக்டர் ஜி. யு. போப் அவர்களும் அறிந்து மகிழ்ந்தனர். அவர் குறிஞ்சிப் பாட்டினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அவருடைய திறனாய்வுக் குறிப்புக்கள் தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்தற்கரிய செல்வமாகும். (The History of Tamil Literature-Page:260).

தலைவி தன் காதல் மணத்தினைத் தாய் முதலியவருக்கு அறிவிப்பதால் தன் குலத்திற்கு எவ்விதச் சிறுமையும் வராது என்று தோழியிடம் கூறியதாகத் தோழி செவிலிக்கு அறத்தோடு நின்றாள். உயர்ந்த குடும்பத்தின் ஒழுக்கத்தைப் பேணுவதில்

தலைவிக்குள்ள ஆர்வத்தைக் கபிலர் விளக்குகிறார். முத்து, மாணிக்கம், பொன் முதலியவற்றாலான அணிகலன்கள் அழியப் பெற்றால் மீண்டும் ஆக்கப் பெறுதல் கூடும். ஆனால் பண்பும், மேம்பாடும், ஒழுக்கமும் மாசுபட்டால் அவற்றால் முன்பு கிடைத்த புகழை மீண்டும் நிலைபெறச் செய்யச் சான்றோர்களாலும் முடியாது என்ற சிறந்த உவமையால் விளக்குகிறார்

...முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குரைய கலங்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி அய்யர்க்கும் அந்நிலை
எளியவென்னார் ... ... (குறிஞ்சி 13-18)

டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் குறிஞ்சிப் பாட்டில் வரும் தோழியின் இத்தகைய நாவன்மையை சேக்சுபியர் எழுதிய ஒதெல்லோ நாடகத்தில் வரும் இயாகோவின் அணி இயல்பான பேச்சாற்றலை (Rhetorical Utterance) நினைவூட்டுகிறது, என்று கூறியுள்ளார். இயாகோவின் பேச்சாற்றல் தீமை விளைவிக்கவும், தோழியின் பேச்சாற்றல் நன்மை விளைவிக்கவும் பயன்படுகின்றன என்ற வேறுபாட்டினை நாம் அறிய வேண்டும்.

தோழி தலைவியின் காதல் மணத்தைச் செவிலிக்குப் பக்குவமாக உரைத்ததைக் கபிலர் அழகான உவமையால் விளக்குகிறார். தலைவியின் அளவு கடந்த துன்பத்திற்கும் அதனைச் செவிலியிடம் கூறினால் அவளிடம் பெருகும் சினத்திற்கும் தோழி அஞ்சினாள். வேறுபாட்டின் மிகுதியால் ஒருவரை ஒருவர் பகைத்துப் போர் செய்யத் தொடங்கும் இரு பெரும் வேந்தர்களையும் அமைதிப் படுத்திப் போரைத் தவிர்க்க முயலும் சான்றோர் நடுநிலைமை பிறழக் கூடாதென்பதால் அளவு கடந்து வருந்துவது போல் தோழி வருந்தினாளாம். வேந்தன் ஒருவனுக்குத் தமிழ்ச் சுவை ஊட்டிய கபிலர் அவனுக்குப் பொருந்தும் உவமையையே கூறி யுள்ளார்.

இகல் மீக் கடவும் இரு பெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
இரு பேரச்சமொடு யானும் ஆற்றலேன்
(குறிஞ்சி 27-29)

ஒரு சமுதாயத்தின் விருப்பு, வெறுப்பு, நம்பிக்கை முதலிய வற்றை வளர்த்துப் பண்படுத்துவது அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே. ஆகையால் அதுவே மனித வாழ்வைப் பெரிதும் மாற்றியமைப்பது என்பர். ஆகவே சட்டம் அறிவியல் முதலிய எவற்றையும் விடப் பெரிய கருவியாய்ச் சமுதாயத்தை உருவாக்கு வது இலக்கியம் எனலாம். அதனால் பாட்டு, காவியம், நாடகம், கதை முதலியன இயற்றித் தரும் புலவர்கள் சட்டம் இயற்றும் ஆட்சியாளரைவிட ஆற்றல் மிக்கவர்கள் என்று டாக்டர் மு. வ. அவர்கள் கூறுவதிலிருந்து தமிழ்ச் சமுதாயத்திற்குக் கபிலர் வகுத்த அறச் சட்டமே மேற்கண்ட இரண்டு உவமைகள் என்பதை அறியலாம்.

தலைவியும் தோழியும் தழல், தட்டை, குளிர் முதலிய கருவி களால் ஓசை எழுப்பிப் பறவைகளைத் தினைப் புனத்திலிருந்து விரட்டினர். சுனையில் மனத்துக்கு விருப்பமான பாடல்களைப் பாடி நீராடினர்.

தழலும் தட்டையும் குளிரும் பிறவும்
கிளி கடி மரபின் ஊழ் ஊழ் வாங்கி
உரவுக் கதிர் தெறூஉம் உருப்பவிர் அமயத்து
விசும் பாடு பறவை வீழ் பதிப் படர (43-46)
பளிங்கு சொரி வன்ன பாய் சுனை குடைவழி
நளிபடு சிலம்பில் பாயம் பாடி (57-58)

பிரப்பு, மூங்கில், மூங்கில் பத்தை முதலிய எளிதில் கிடைக்கும் பொருள்களால் கருவிகள் செய்து அவற்றைச் சுற்றியும் தட்டியும் இழுத்து விட்டும் பல் வகையான ஓசைகளை எழுப்பிப் பறவைகளை விரட்டுவது, நீராடும் பொழுது பாட்டுப் பாடுவது ஆகிய செயல்கள் மூலம் பாமரத் தமிழ் மக்களுக்கு இருந்த இசையார்வத்தினைக் கபிலர் யாழிசையில் வல்ல யாழ்ப்பிரமதத்தனுக்கு எடுத்துக் காட்டினார்.

தலைவியும் தோழியும் நீராடிக் காந்தள் முதலான பல்வேறு பூக்களைப் பறித்ததைக் கூறும் போது காந்தள் முதல் மலை எருக்கப் பூ முடிய 96 மலர்களின் பெயரை விவரிக்கிறார். அவர்கள் பறித்த மலர்கள் பிறவும் உளவாம். டாக்டர் உ. வே. சா. அவர் களும் டாக்டர் ஜி. யு. போப் அவர்களும் மலர்களின் எண்ணிக் கையைத் தொண்ணூற்று ஒன்பதாகக் (99) கணக்கிட்டுள்ளனர். "தொண்ணூற்று ஆறு வகைப் பூக்களின் பெயர்ப் பட்டியல் பாட்டு என்ற கலையின் எல்லைக்குள் அமையாத விளக்கப் பகுதியாகும்"

என்ற டாக்டர் மு. வ. அவர்களின் ஆராய்ச்சி உரையில் (இலக்கிய மரபு : பக் : 37) மலர்களின் எண்ணிக்கை 96 ஆகவே காணப்படுகிறது. பச்சிலை, முருக்கிலை, நறவக்கொடி ஆகிய மூன்று குறிஞ்சிப் பாட்டுச் சொற்களும் மலர்களைக் குறிப்பனவல்ல. இவை மூன்றையும் நீக்கினால் மலர்களின் எண்ணிக்கை 96 ஆவதை அறியலாம். இப்பகுதியைப்பாட்டு என்ற கலையின் எல்லைக்குள் அமையாத விளக்கப் பகுதி என்று டாக்டர் மு. வ. அவர்கள் கூறியுள்ளார். எனினும் இப்பகுதியைத் திணை மயக்கத்துக்குச் சிறந்த சான்றாகக் காட்டலாம். குறிஞ்சியொழிந்த நிலங்களுக்குரிய கருப்பொருளாகிய மலர்களைக் கபிலர் இப்பட்டியலில் கூறியுள்ளார். கபிலர் பாடிய பெருங்குறிஞ்சியில் வரைவின்றிப் பூ மயங்கியவாறு காண்க என்று நச்சினார்க்கினியர் உரையாலும் இதனை அறியலாம் (தொல். பொருள் : 19). தமிழரின் செடியியல் (Botany) பற்றிய அறிவினை ஆரிய அரசனுக்கு அறிவிக்கக் கபிலர் இவ் விளக்கத்தைப் பயன்படுத்தியுள்ளார். டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் இம்மலர்களின் எண்ணிக்கையை வியந்து இவற்றை இன்றும் தென்னிந்திய மலைச் சரிவுகளில் தேடினால் காணலாம் என்று கூறியுள்ளார். ★ இம்மலர்களின் பெயர்களில் சண்பகம், பலாசம் ஆகிய இரண்டுமே வடமொழிச் சொற்கள். எஞ்சியன தூய தனித் தமிழ்ச் சொற்கள். குறிஞ்சிப் பாட்டில் மிக அருகிய வடமொழிச் சொற்களே உள என்று கூறுவதன் வாயிலாக டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் தன்னைத் தலை சிறந்த தமிழ் மாணாக்கர் என்பதை நிறுவிக் காட்டுகிறார். (Whenever Idie a student of Tamil will be Inscribed on my monument-G.U. pope).

"மதங்கொண்ட யானை மரங்களை ஒடித்து வருவதைத் தன் போக்கிலே திணைப்புனம் சென்று திணையுண்ணப்புகுந்த யானை யால் நூறு செய் நிலமும் பாழ்படும்" என்ற பிசிராந்தையார் பாட்டுச் செய்தியுடன் (புறம் : 184) ஒத்து நோக்கவேண்டும். தலைவன் தன் நாய்களை விரட்டித் தலைவியின் அச்சத்தைப் போக்கிய நிகழ்ச்சி அவர்களைக் கூட்டுவித்தது. அச்சத்தால் தன்னைப் பொருந்திய தலைவியைக் காப்பாற்றி அவள் அச்சத்தை அகற்றத் தலைவன் அம்பெய்து யானையைத் துரத்திய இரண்டாம் நிகழ்ச்சி அவர்கள் காதற்சேர்க்கை உறுதிபடக் காரணமாயிற்று. அய்ரோப்பியப் புதின ஆசிரியர்கள் தம் பாத்திரங்களிடையே காதலை வளர்க்க இத்தகைய சொற்களும் செயல்கள்

★ குறிப்பு : "இப்பாடலில் தொண்ணூற்றொன்பது வகை மலர்கள் மலர்ந்து பாடல் முழுவதும் மணம் வீசுகிறது"— ஜெ. ஸ்ரீசந்திரன், எம். ஏ.
(தமிழ் இலக்கிய வரலாறு)

செய்தலை அல்லது நன்மை விளைவித்தலைச் சிறந்த ஆய்வுப் பொருளாகக் (Theme) கொள்வர்" என்பன டாக்டர் ஜி. யு. போப் அவர்களின் திறனாய்வுச் செய்திகளாகும்.

மதங்கொண்ட யானையால் அஞ்சிய தலைவி நாணத்தை மறந்து நடுங்கிய உள்ளத்தோடு சென்று தலைவனைத் தழுவித் தெய்வம் ஏறிய மயில் போல நடுங்கினாளாம்.

உய்விடம் அறியேமாகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளைதெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்தி
சூர்உறு மஞ்ஞையின் நடுங்க

இஃதோர் அழகிற் சிறந்த காட்சியாகும். இவ்வுவமை நமக்குப் புதியதும் அழகியதும் உண்மையானதுமாகும். திருச்செந்தூர்க் கடற்கரைக் கோவிலில் அழகிய மயில்கள் மணிக் கணக்கில் நடனமாடுவதையும் சில நொடிப்பொழுதுக்கொரு தடவை ஒரு வகைச் சிரிப்பும் சலசலப்பும் அவற்றின் தோகை முழுவதையும் கடந்து செல்வதையும் நாம் காணலாம். அச் சிலிர்ப்பில் கபிலரால் இங்குக் குறிக்கப்பட்டுள்ள Sharp. Sudden எனும் ஆங்கிலச் சொற்களின் பொருள்களை உணர்த்தும் ஒய் என்ற தமிழுக்கேயுரிய தனிச் சொல்லின் பண்பையும் விரைவையும் பேரழகையும் காணலாம். (The Rev, Dr. G. U. Pope, M. A., D. D. -A History of Tamil Literature: Page: 273)

புலவர் தாம் கருதியதனைத்தையும் வெளிப்படையாகக் கூறாமல் போயினும் கற்போர் அவர் கருதிய பொருள் இத் தகையது என்று ஆராய்ந்து கொள்வதற்கேற்ற சொற்களைக் கொண்டு முடிவது உள்ளுறை உவமையாகும் (உவமத்தின் உள் உறைவது-உள்ளுறை உவமம்). உள்ளுறை உவமம் தெய்வம் நீங்கலாக உள்ள கருப்பொருள்களை நிலைக் களனாகக் கொண்டு வெளிப்பட்டுத் தோன்றும்.

உள்ளுறுத்து இதனோடொத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்திறுவதை உள்ளுறை உவமம்.
உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்
கொள்ளும் என்ப குறியறிந்தோரே.

(தொல். : அகத்திணை இயல்)

குறிஞ்சிப் பாட்டில் காணப்படும் இரண்டு உள்ளுறை உவமை களையும் (Implied Simile - Dr. G U. Pope) நச்சினார்க்கினியர் திறப்பட எடுத்துரைக்கின்றார்.

தலைவனுக்குரிய குன்றின் சாரலில் உள்ள பழுத்த மிளகு சிந்திக் கிடக்கின்ற பாறையிடத்து நீண்ட சுனையில் மாப்பழம் விழுந்தமையால் உண்டான மாப்பழச்சாறு, மாவின் தாக்குதலால் ஈக்களின் கூட்டினின்றும் ஒழுகிய தேன், தானாக கனிந்த விழுந்த பலா பழத்தின் சாறு ஆகியவற்றால் உண்டான கள்ளானது நீரோடு கலந்திருந்தது. அதனைப் பருகும் நீர் என்று எண்ணிக் குடித்த மயில் விழாக் களத்தில் வாத்தியங்களின் ஓசைக்கேற்பக் கயிற்றின் மீது ஆடுகின்ற மகள் தளர்வது போலத் தளர்வடைந்ததாம்.

பழு மிளகு உக்க பாறை நெடுஞ்சுனை
முழு முதல் கொக்கின் தீங்கனி உதிர்ந்தென
புள்ளெறி பிரசமொடு ஈண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர் செத்து அயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
அரிக் கூட்டின்னியம் கறங்க ஆடு மகள்
கயிறூர் பாணியில் தளரும் சாரல்.

மிளகு சிந்திக் கிடக்கும் பாறை அந்நிலத்து மாக்கள் உறைகின்ற ஊராகவும் சுனை தலைவன் குடிபாகவும் மாம்பழத்தாலும், பலாப் பழத்தாலும் விளைந்த கள் தந்தை தாயால் உளனாகிய தலைவனாகவும் தேன் இவரைக் கூட்டின பால்வரை தெய்வ மாகவும் அதனைப் பருகிய மயில் உயர்ந்த தலைவனைத் தன் குலத்திற்கு ஒத்தானாகக் கருதி நுகர்ந்த தலைவியாகவும், அக் கள்ளிற் பிறந்த களிப்புக் களவொழுக்கத்தால் பிறந்த பேரின்ப மாகவும் மயில் ஆட ஆற்றாத தன்மை வருந்திக் குறைந்த தன்மை யாகவும் உள்ளுறை உவமம் கொள்ளவேண்டும்.

விண்ணைத் தீண்டுகின்ற சிகரங்களிலே கிளைத்த செங்காந் தளினுடைய குளிர்ந்த மணக்கின்ற பூக்கள், கீழே வரையர மகளிர் பரந்து விளையாடுதலினால் தந்நலம் சிறிது கெட்டு விரும்புதல் தரப்படிக் கீழே வந்து பரந்து நன்றாகிய பலவாகிய கச்சு விரிந்த களம் போல அழகு பெறப் பொலிவு பெற்ற மலை பொருந்தின நாடன் தலைவியின் காதலன் ஆவான்.

வரையர மகளிரில் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தள்
தண்கமழ் அலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்தில் கவின்பெறப் பொலிந்த
குன்று கெழு நாடன்.

உயர்ந்த நிலத்தே நின்று மணக்கின்ற காந்தள் வரையர மகளிரால் கீழ் நிலத்தே பரந்த அவ்விடத்தைக் கச்சு விரித்தார் போல அழகு பெறுத்தும் என்றதனால் உயர்ச்சியை உடைய தலைவன் தலைவியின் நல் வினையால் தனது பெருமைதானும் ஒழிந்து தலைவியிடத்து வந்து கூடித் தலைவியின் குடிக்கு உயர்ச்சியுளதாக்கி அவர்களை அழகு பெறுத்துகின்றான் என்பது உள்ளுறை உவமமாகும். தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலிக்கு அறத்தோடு நின்ற தோழியின் பண்பாட்டையும் பிறிதோர் சொல்லால் வெல்ல முடியாத அவள் சொல்லாற்றலையும் கபிலரது பாட்டுப் புலப்படுத்துகிறது.

யானையைக் கண்ட அச்சத்தால் தலைவனைத் தழுவிய தலைவி நாணத்தாலும், அச்சத்தாலும் அவன் அணைப்பிலிருந்து விடுபட விரும்பியும் தலைவன் அவளை விடாமல் தழுவிக் கொண்டான். தலைவியின் உள்ளத்துணர்வு திருமணம் செய்து கொண்டு இல்லறம் நிகழ்த்துவதாகவே இருக்க வேண்டும் என்று கருதினான். அவ்வேளையில் தோன்றிய தலைவியின் செயல்களும் தோற்றமும் பேரழகு பெற்றுத் திகழ்ந்தன. டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் இளங்காதலின் மலர்ச்சியும் காதலின் வண்ண ஒளியும் என்ற டிரைடனின் பாடல் வரியை இங்கு ஒப்பு நோக்கி இன்புறச் செய்வார்.

தலைவியின் உள்ளக் கருத்தறிந்த தலைவன் தலைவியைப் பார்த்துப் பலரும் வந்து உண்ணும்படி அகலக் கதவு திறந்து கிடக்கின்ற வாசலையுடைய வளநகர் மிடாச் சோற்றை வருவார்க்கெல்லாம் அளவில்லாமல் இடுகின்ற விழாக் கொண்டாடினாற் போன்ற செல்வத்தையுடைய மனை பொலிவு பெறும் வண்ணம் பசுமையான புலவுகலந்த நெய் மிக்க உணவினை நீ இடுகையினாலே குற்றமில்லாத உயர்ந்த குலத்தில் பிறந்த உயர்ந்தோர் தமது சுற்றத்துடன் விருந்துண்டு எஞ்சிய உணவினை நீ இடுக்கையினாலே நான் உண்பது உயர்ந்தது. அத்தகைய இல்லறம் நர்மை வீடு பேற்றில் செலுத்தும் என்று கூறினான்.

உள்ளத்தன்மை உள்ளினன் கொண்டு
சாறு அயர்ந்தன்ன மிடாஅச் சொன்றி
வருநற்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசையில வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில்பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவதென்றாங்கு
அறம் புணையாகத் தேற்றி

தமிழர்களின் அறவாழ்வை ஆரிய அரசன் வியந்து போற்றுமாறு கபிலர் குறிஞ்சிப் பாட்டை இயற்றியமைக்கு இப்பகுதி சான்றாகும்.

வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

என்ற திருக்குறளையும் இப்பகுதி ஒத்து நிற்கிறது. இவ்வாறு தலைவிக்கு ஆறுதல் கூறிச் சூளுரைத்த தலைவன் அன்று பகல் முழுவதும் சோலையில் தலைவியுடன் தங்கி இன்பம் துய்த்தான். வானத்தில் உள்ள தேவர்களும் விரும்பும் பூக்கள் நிறைந்த சோலையில் தலைவனும் தலைவியும் தங்கினராம்.

இயற்கைக் கவிஞர் கீட்சு அவர்களின் கவிதையில் காணப்படும் ஓய்விடம் போன்ற சோலையில் தலைவனும் தலைவியும் தங்கினர் என்று டாக்டர் போப் அவர்கள் கூறியுள்ளார்.

அருவிடரமைந்த களிறு தரு புணர்ச்சி
வானூரி உறையுள் வயங்கியோர் அவாவும்
பூமலி சோலை அப்பகல் கழிப்பி.

கபிலர் மாலைப் பொழுதினை இறுதியாகப் புனைந்து உரைக்கின்றார். குறிஞ்சி நிலத்தில் மாலைப் பொழுது வரத் தொடங்கியதையும் மாலைக் கால நிகழ்ச்சி களையும் மாலைக்குரிய சின்னங்களையும் தீட்டிக் காட்டக் கபிலர் தம் திறமை முழுவதையும் பயன்படுத்தியுள்ளார் என்று டாக்டர் போப் அவர்கள் புகழ்ந்துரைக்கின்றார். முல்லைக்குரிய மாலைக்காலம் குறிஞ்சியில் மயங்கி வந்ததையும் இங்கு அறியலாம். ஆதவன் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் சென்று மேற்கு மலையில் மறைந்தான். மான் கூட்டங்கள் மரங்களின் கீழ்த் தங்கி அசை போட்டன. பசுக்கள் கன்றுகளை அழைக்கும் குரலையுடையவாய்க் கொட்டில்கள் நிறையப் புகுந்தன. ஊது கொம்பு போன்ற ஓசையையுடைய

வளைந்த வாயினைக் கொண்ட அன்றில் பறவைகள் பனை மரத்தின் மடலில் தங்கித் தம் துணையை அழைத்தன. பாம்புதாம் மேய்வதற்கு வெளிச்சம் தரும் மாணிக்கங்களை உமிழ்ந்தன. பல்வேறு இடங்களிலிருந்து ஊர் திரும்பிய இடையர்கள் தம் இனிய குழல்களில் ஆம்பல் பண்ணினைத் தெளிவாக ஊதினர். ஆம்பல் மலர்கள் மலர்ந்தன. பார்ப்பனர் மாலைக் காலத்துச் செய்யும் தொழில்களை நிகழ்த்தினர். செல்வம் மிக்க இல்லங்களில் வாழும் அழகிய வளையல்களணிந்த மகளிர் விளக்கேற்றி மாலைக் கடன்களை ஆற்றினர். கானவர் விண்ணளாவிய பரண் மீது தீக்கடைகோலில் தீ மூட்டினர். மேகங்கள் பெரிய மலைகளைச் சூழ்ந்து கருமை நிறம் பெற்றன. காட்டு விலங்குகள் கல் என்னும் ஓசையை எழுப்பின. பகைவர் மேல் சினம் கொண்ட வேந்தன் ஒருவனது படையெடுப்பைப் போல மாலைப் பொழுது விரைந்து நெருங்கியது.

எல்லை செல்ல ஏழுர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலம் கல் சேர்பு மறைய
மான்கணம் மரமுதல் தெவிட்ட ஆன்கணம்
கன்று பயிர் குரலமன்று நிறை புகுதர
ஏங்கு வயிரிசைய கொடுவாய் அன்றில்
ஓங்கிரும் பெண்ணை அகமடல் அகவப்
பாம்பு மணி உமிழப் பல்வயின் கோவலர்
ஆம்பலம் தீக்குழல் தெள்விளி பயிற்ற
ஆம்பல் ஆயிதழ் கம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயரக் கானவர்
விண் தோய் பணவை மிசை ஞெகிழி பொத்த
வான மாமலை வாய் சூழ்பு கருப்பக் கானம்
கல் என்று இரட்டப் புள்ளினம் ஒளிப்பச்
சினை இய வேந்தன் செல் சமம் கடுப்பப்
துனை இய மாலை துன்னுதல் காணூ உ

பிற நாட்டு வேந்தன் ஒருவனுக்கு ஒரு பாட்டின் வாயிலாகவே தமிழின் மாண்பு முழுவதையும் உணர்த்தப் புகுந்த கபிலர் இத்தகைய வருணனைகளைச் சிறிது விரிவாகவும் கூறக் கடமைப் பட்டவர் என்று அறிதல் வேண்டும். ''கவிதையின் கருத்துப் பொருளை வைத்து அதை மதிப்பிடலாகாது. ஆனால் அக்

கருத்துக்கள் இணைந்து, சுவை ஆழத்தை மிகுவித்த அளவை வைத்தே, கவிதையை மதிப்பிட வேண்டும்", என்ற இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் கூற்றினை இங்குப் போற்றுதல் வேண்டும்.

இளமையும் செல்வமும் வாய்ந்த தலைவன் தன்னைக் காண வந்து காணாமல் செல்லும் மாய வரவுக்காகவும் தலைவன் வரும் வழியில் உள்ள இடர்களுக்காகவும் தலைவி வருந்துகிறாள். வலைப் பட்ட மயில் போலத் தலைவி நலமழிந்து தலைவன் நினைவால் கண் கலங்குகிறாள் என்று தோழி கூறுவதுடன் குறிஞ்சிப் பாட்டு நிறைவடைகிறது. தோழி இவ்வாறு கூறியதால் செவிலி, தலைவிக்கும் தலைவனுக்கும் மணம் முடித்து வைக்க வேண்டும் என்ற கருத்தையும் புலப்படுத்தினாள். கவிதையை ஒரளவு திடீரென முடித்த கபிலர், அதன் பிறகு தலைவியும் தலைவனும் திருமணம் புரிந்து நலமுடன் வாழ்ந்தனர் என்பதை உய்த்துணர வைக்கிறார்.

தோழி கூற்றினைக் கேட்ட செவிலி அவளுக்கு மறுமொழி கூறியதைத் தெரிவிக்கும் வெண்பா ஒன்று குறிஞ்சிப் பாட்டின் இறுதியில் காணப்படுகிறது. தோழி, தலைவி, தான், தலைவன் ஆகிய யார் மீதும் தவறில்லை. தெய்வத்தால் நிகழும் காதல் ஒழுக்கம் உயர்வானதே என்பதைச் செவிலி கூற்றுப் புலப் படுத்துகிறது,

நின் குற்றம் இல்லை நிறைதொடியும் பண்புடையள்
என் குற்றம் யானும் உணர்கலேன் – பொன்குற்று
அருவி கொழிக்கும் மணிமலை நாடன்
தெரியுங்கால் தீயது இலன்

"களிப்பு மிக்க காதலர் பயிலிடமும் காதலரைச் சோலைக்கழைத்துச் செல்லும் சாலையும் மேலுறையாகும் இலை நிறை சோலையும் பற்றிப் பாடும் கதை பொதி பாடல் சுவை மிக்கதாம்" என்ற ஆங்கிலக் கவிஞர் வேர்டுசுவொர்த் அவர்களின் பாடல் குறிஞ்சிப் பாட்டுக்குப் புகழுரையாவதையும் கபிலரது குறிஞ்சிப் பாட்டின் உயர்தனிக் கவர்ச்சியையும் நாம் பணிவுடன் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கூறி டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் கபிலரின் திறமான புலமையை வணங்குகிறார். நாமும் வணங்குவோமாக.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இதழ்களையும் தொடர்ந்து நடத்துவதற்குப் பலர் பொருளுதவி வழங்கினர் என்றால் திரு. வி. க. வின் இதழ்ப்பணியின் சீரிய தொண்டே காரணம் ஆகும்.

நாட்டு நடப்புகளை யாருக்கு எழுதுகின்றோம் என்று எண்ணி எழுதிய ஆசிரியராக அவர் திகழ்ந்தார். நடுவுநிலை தவறாத நல்லுள்ளங் கொண்டு தலையங்கம் தீட்டினார். நாட்டுப் பற்றினை யும் மொழிப் பற்றினையும் இணைத்துப் போற்றிய இணையற்ற அறிஞராகவே அவர் வாழ்ந்தார். பெண்ணுரிமை பற்றி இடையிடையே பேசுவார்; தொழிலாளர் நலம் பேணத் துணிந்து எழுதுவார்; நாட்டுக் கல்வி குறித்து அடுக்கடுக்கான சான்றுகளைத் தேசபக்தன் மூலம் நிலைநாட்டுவார்; அரசியற் கருத்துக்களை ஆணித்தரமாக அள்ளி அள்ளித் தருவார்; சமுதாயச் சீர்திருத்த எண்ணங்களைத் தம் எழுத்துக்களின் மூலம் வாரிவாரி வழங்குவார்; எங்கேனும் தீமை விளைந்தால் மனம் நாணுவர்; பஞ்சாப் படு கொலையின் போது தேசபக்தனில் தலையங்கக் கட்டுரை எழுதாமையே இதற்குச் சான்றாகும்; கொடுமை தலைதூக்கும் போது சுட்டிக் காட்டித் திருத்த முனைவார். இவ்வாறு இதழா சிரியராகப் பணிபுரிந்தமையாலேதான் தமிழ் இதழியல் துறையின் விண்மீனாக இன்றும் விளங்குகின்றார். ஒவ்வொரு வரியிலும்- ஏன் எழுத்திலும் அவர் கருத்துச் செலுத்தினார். அப்படி விளங்கிய விழிப்பினைக் கண்டு வியந்த பாவேந்தர் பாரதிதாசனார்,

''சின்னபிழை ஏடெழுதும்
கணக்காயன் செய்திடினும்
திருநாட்டார்பால்
மன்னிவிடும் ஆதலினால்
ஏடெழுதும் வாழ்க்கையிலே
விழிப்பு வேண்டும்!''[19]

என்று பின்வரும் இதழாசிரியர்களுக்கு வேண்டுகோள் விடுத்-தாரோ என்று எண்ண இடம் ஏற்படுகிறது. தமிழ் இதழியலில் முன்னோடியான திரு. வி. க. வின் உணர்வுகளை இன்று எந்த ஏடுகளும் பின்பற்றவில்லையே என்று எண்ணுகின்றபொழுது தமிழ் நெஞ்சிலே ஏக்கம் பிறப்பது இயல்புதானே!

---

19. பாரதிதாசன், மு.நூ., ப. 47

துணை நூற்பட்டியல்

அ. நூல்கள்

1. இளங்கோவன், மா. ரா. இதழியல் நோக்கு, சென்னை; சேகர் பதிப்பகம், முதற்பதிப்பு, 1981.

2. கல்யாணசுந்தரனார், திரு. வி. திரு. வி. க. வாழ்க்கைக்குறிப்புகள் (பகுதி 1) சென்னை: கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1969.

3. ... ... தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு (முதற் பகுதி) சென்னை; அரசி புத்தக நிலையம், நான்காம் பதிப்பு, 1969.

4 ... ... தேசபக்தாமிர்தம், சென்னை பிரிட்டிஷ் இந்தியா அச்சுக்கூடம் முதற்பதிப்பு, 1919. (இந்நூலைத் தந்துதவிய அறிஞர் இர. குழந்தைவேலு பூ.சா.கோ. கலைக்கல்லூரி, கோவை) அவர்கட்கு நன்றி.

5. சாலை இளந்திரையன், புதுத்தமிழ் முன்னோடிகள், புத்தகாலயம், முதற் பதிப்பு, 1969.

6. 'சோமலெ' தமிழ் இதழ்கள், சென்னை; சென்னைப் பல் கலைக்கழக வெளியீடு, முதற்பதிப்பு; 1975.

7. ஞானசம்பந்தன். அ. ச. திரு. வி. க. (கல்கி நினைவுச் சொற் பொழிவுகள்) சென்னை; பாரி நிலையம், முதற்பதிப்பு, 1968.

ஆ. இதழ்கள்

1. தேசபக்தன் இதழ்கள் (3-12-1919, 19-12-1919) தந்துதவிய மா. ரா. இளங்கோவனின் துணைவியார் திருமதி புனிதவதி இளங்கோவன் (சென்னை) அவர்கட்கு நன்றி.

2. நவசக்தி இதழ்கள் (சிலம்பு 12 பரல் 26 முதல் சிலம்பு 13 பரல் 9 வரை) தந்துதவிய பேராசிரியர் திரு அ. ஆனந்தராசன் (தியாகராசர் கலைக் கல்லூரி, மதுரை) அவர்கட்கு நன்றி.

(குறிப்பு : மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வித் தமிழ்த்துறை 4—?—'83 ல் நடத்திய திரு. வி. க. நூற்றாண்டு விழாவின்போது வழங்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரை இது.)

பன்னிரு திருமுறைகள்

(வித்துவான் பெ. கு. வரதராசன், எம். ஏ., பி. ஒ. எல்., பி. டி.,
துணைப் பேராசிரியர், அரசு கலைக்கல்லூரி, கிருட்டினகிரி)

சைவ இலக்கியங்கள் பலவற்றுள்ளும் தலை சிறந்து நிற்பன பன்னிரு திருமுறைகளே. இத்திருமுறைகளை இயற்றிய ஆசிரியர்கள் சைவப் பெரியார்களே. சிவ பெருமானைத் தம் வழிபடு தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த சிவனடியார்கள், சைவம் தழைத்தோங்கச் செய்த பல அரிய முயற்சிகளுள் இச்சைவ இலக்கியங்களைப் படைத்தமையும் ஒன்றாம்.

"எந்நாட்டவரும் இறையென்று வணங்குகின்ற பரம்பொருளை சிவம் என்று கூறுகின்றன. வேதாகமங்களும் திருமுறைகளும் 'செம்பொருள்' என்று பொதுமறை புகல்கின்றது. சிவம் மூவர்க்கும் தேவர்க்கும் மேலான பொருள். சிவத்துடன் தொடர்பு கொண்டது சைவம் சிலா-கல்; கல்லின் தொடர்புடையது சைலம்; திலத்தின் தொடர்புடையது தைலம், இது போல் சிவசம்பந்தமுடையது சைவம் என உணர்க"[1]

சைவ சமய வளர்ச்சிக்குப் பெருந்துணையாக நிற்பன பன்னிரு திருமுறைகள். இத்திருமுறைகள் சிவபெருமானையும் அடியார்களையும் பற்றிக் கூறுகின்றன. "இத்திருமுறைகள் தோன்றிய காலம் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னரென்பது யாவரும் பொதுவாக அறிந்த உண்மை".[2] "முதல் எட்டுத் திருமுறைகளும் பத்தாந்திருமுறையும் பல்லவர் காலத்தவை. 11-ம் திருமுறையில் உள்ள காரைக்கால் அம்மையார், ஐயடிகள் சேரமான் பெருமாள், நக்கீரதேவர், பரணதேவர், கபிலதேவர், கல்லாடதேவர் ஆகியோர் இயற்றிய பாடல்களும் பல்லவர் காலத்தவையே. அவை நீங்கலாக உள்ள 11-ம் திருமுறைப்பாடல்களும், 9 ம் திருமுறையும், 12ம் திருமுறையும் சோழர் காலத்தில் செய்யப்பட்ட திருமுறைகள் ஆகும்."[3]

---

1. கந்தரநுபூதி உரையுடன்- கிருபானந்தவாரி - திருப்புகழமிர்தம் காரியாலயம், சென்னை-2; 1967- முன்னுரை பக்கம் - IV
2. சைவ இலக்கிய வரலாறு ஒளவை அ.து. அண்ணாமலைப்பல்கலைக்கழக வெளியீடு 1958 - பக்கம்-1
3. சைவ சமய வளர்ச்சி- எம். இராச மாணிக்கனார்- ஒளவை நூலகம்- முதற்பதிப்பு 1958- பக்கம் 245

திருமுறை காலத்திற்கு முன் சிவ வழிபாடும் சைவ சமயப் பற்றும் மக்களிடத்தே எந்த அளவில் இடம் பெற்றிருந்தன வென்பதை ஆராய்வோம்.

"சிவ வழிபாடு தமிழரால் தொடக்கப்பெற்றது. இருக்கு வேதத்தில் சிவலிங்க வழிபாடு இகழப்படுவதால் அஃது ஆரியருக்கு ஆதியில் உரியதன்று. உருத்திரன் என்ற ஆரியச் சொல் செம்மையன் என்று பொருள்படும். தமிழில் செம்மை என்ற சொல்லின் அடியாகச் சிவப்பு, சிவம் என்ற சொற்கள் தோன்றின சிவனுக்குதிருமேனி செம்மேனியாதலால் சிவ வழிபாடே உருத்திர வழிபாடாக ஆரியத்துள் தழுவப்பட்டது." [4]

இதிகாசங்கள் இரண்டுமே சிவனையும், சிவ வழிபாட்டையும் சிறப்பித்துப் பேசுகின்றன. தொல்காப்பியத்துள் தனியாகச் சிவனைப்பற்றியும் சைவத்தைப்பற்றியும் பேசப்படவில்லையாயினும், கோயில்கள், விக்கிரகங்கள் அவற்றுக்குப் பூசை விழாக்கள் இருந்தனவென்பது இளம்பூரனர் உரையால் தெரியவருகிறது. தொல்காப்பியர் காலத்திற்குப்பின் தொகை நூற்களில் சிவனைக் குறிக்கும் பெயர்கள் காணப்படுகின்றன. 'தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன்','முக்கட் செல்வன்','நீலமணிமிடற்று அண்ணல்' போன்றவை சிவனைக் குறிக்கும் செற்றொடர்களே. சமண, பௌத்த நூல்களாகிய சிலப்பதிகாரமும்,மணிமேகலையும்கூட சிவ வழிபாட்டையும் சைவவாதி ஒருவனைப்பற்றியும் குறிக்கின்றன.

இலிங்க வழிபாடு வேதகாலத்திற்கு முற்பட்ட சிந்து வெளி மக்களிடம் இருந்தது. இதிகாச காலத்தில் எல்லோரிடமும் பரவியது. இலிங்கம் சிவபெருமானைக் குறிக்கும் மூர்த்தமாகக் கருதப்பட்டது. தென்னிந்தியாவில் வேதகாலத்திற்கு முற்பட்ட கற்காலத்திலேயே இலிங்கங்கள் இருந்தன. "இதிகாச காலத்தில் இராமனால் இராமேசுவரத்தில் இலிங்கம் வழிபடப்பட்டது என்று இராமாயணம் கூறுகிறது. குடிமல்லம், களத்தூர், குடுமியான் மலை என்னுமிடங்களிலுள்ள இலிங்கங்கள் கி. மு. 2-ஆம் நூற்றாண்டினவென்று ஆராய்ச்சியாளர் கூறியுள்ளனர்'. [5]

ஆகவே திருமுறைகள் தோன்றிய காலத்திற்கு முன்பே நம் நாட்டில் சிவவழிபாடு இருந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. சிறப்பாகத் தென்னாட்டு மக்களே எந்

4. தமிழர் சமயம்- கா.சு.பிள்ளை - கழகப்பதிப்பு- மூன்றாம் பதிப்பு - 1977- பக்கம்-6

5. சைவ சமய வளர்ச்சி-மா. இராசமாணிக்கனார்-பக்கம் 26

நாட்டுக்கும் இறைவனாகிய கடவுளை சிவன் என்று சொல்லி வழிபட்டனர். "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி,"[6] என்ற தொடர் மேற் சொன்ன கருத்தினை வலியுறுத்தும். தென்னாட்டில் நிலவியிருந்த தொன்மைச் சமயமும் சைவசமயமேயாகும்

பல்லவர் காலத்திற்கு ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் சைவ சமயம் பௌத்த, சமண மதங்களை வென்று உயரிய நிலையைப் பெறலாயிற்று. அவ்வளர்ச்சி திருமுறைகள் தோன்றியதன் பயனேயாகும்.

இத்திருமுறைகள் கடவுளைக் கண்ட பெரியோர்களால்,கடவுளிடம் உள்ள பேரன்பின் மிகுதியினால் மனம் பொங்கி வெளிவந்த பாடல்களினால் ஆனவை. "திருமுறைகள் சைவ இலக்கியத்தில் ஒரு சிறப்புப் பெறுவதுடன் மக்களை நல்வழிப்படுத்திச் சிந்தையைச் செம்மை செய்யும் திறனுடையன. தென்னாடு பக்தியில் தனிச் சிறப்புற்றது"[7] அந்தத் தனிச் சிறப்பு இந்த நூல்களால்தான் ஏற்பட்டுள்ளது. இந்த சிறந்த பக்தி இலக்கியம் வடநாட்டிலும் பரவச் செய்திருக்கிறது.

"நாயன்மார்களின் பக்திப் பாடல்கள் விளைத்த புரட்சி ஒன்று கடவுளுக்கு முன், மக்கள் எல்லோரும் சமமானவர்கள் கடவுள் ஒருவரே எல்லா மக்களுக்கும் தலைவர் என்ற கருத்தைப் பரப்ப அந்தப் பாடல்கள் உதவின. அதனால் அரசர்களையும் செல்வர்களையும் பாடுவதற்குப் பயன்பட்ட தமிழ், கடவுளைப் பாடுவதற்கு மட்டுமே பயன்படவேண்டும் என்ற கொள்கை வளர்ந்தது. அரசர்களுடைய அரண்மனைகளையும், செல்வர்களுடைய மாளிகைகளையும் நாடிச் சென்று ஏங்கி நிற்பவர்களைத் திருப்பிக் கோயில்களை நாடி நிற்கச் செய்தன. அரண்மனைப் பெயராக அதுவரை வழங்கி வந்த கோயில் என்ற சொல்லே கடவுளின் ஆலயத்திற்கு உரிய சொல்லாகுமாறு மாறுதல் ஏற்பட்டுவிட்டது."[8]

"இத் திருமுறைகளை இராசராசன் செம்மைப்படுத்தற்கு முன்பே திருவல்லம், எறும்பியூர், பாமூர், ஆவடுதுறை, தவத்துறை,

---

6. மாணிக்க வாசகர் - போற்றித் திருவகவல் - வரி 164-65

7. டி. எம். நாராயண சாமி பிள்ளையவர்களது அணிந்துரை-சைவ இலக்கிய வரலாறு-ஔவை சு. து. பக்கம் 11.

8. தமிழ் இலக்கிய வரலாறு - டாக்டர். மு வ. சாகித்ய அக்கதமி-புதுதில்லி பக்கம்-125.

ஆத்தூர், குமார வயலூர், அந்துவநல்லூர் முதலிய ஊர்க்கோவில்களில் திருப்பதிகங்கள் ஓதப்பட்டன. ஆகவே திருமுறைகள் முறையாகத் தொகுக்கப்படாமுன்பே அவை கோயில்களில் ஓதப்பட்டு வந்தன என்பது புலனாகின்றது.''[9] பக்தி இலக்கியங்களுக்கு முன் தோன்றிய மற்ற இலக்கியங்கள் கற்றவர்கள் மட்டுமே படித்தின்புறத்தக்கன. பக்தி இலக்கியங்களோ கல்லாதாரும் கற்றவர்களோடு சேர்ந்து பாடி இன்பந்துய்க்க உரியனவாக விளங்கின.

திருமுறைகள் பன்னிரண்டென்ப. அவற்றுள் முதல் மூன்று திருமுறைகள் ஞானசப்பந்தர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள். திருநாவுக்கரசர் என்னும் அப்பர் சுவாமிகள் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து ஆறு திருமுறைகளாகும். சுந்தரர் பாடிய திருப்பாட்டு என்னும் தேவாரம் ஏழாந்திருமுறையாகும். மாணிக்கவாசகருடைய திருவாசகம் எட்டாந்திருமுறையாகும். அவருடைய திருக்கோவையை எட்டாந்திருமுறையோடு சேர்த்துக் கூற விரும்பாதவர்களுமுளர். அவர்களுடைய கூற்று ஏற்புடைத்தன்று என்பர்சான்றோர். திருவிசைபபா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாந்திருமுறையுள் அடங்குவன. இத்திருமுறையில் உள்ள பாடல்களைப் பாடியவர்கள் திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் முதலிய ஒன்பது அருளாளர்கள் ஆவார்கள். பத்தாந்திருமுறையைத் திருமந்திரம் என்பர். இதனைப் பாடியவர் திருமூலராவார். திருமூலருக்கு முன் தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் சைவ சித்தாந்த நூல் இல்லை. திருமந்திரமே, சைவ சித்தாந்த முதல் நூல் என்பர் ஆராய்ச்சியாளர்கள்.

"சைவத்தின் நான்கு பிரிவுகளைத் திருமந்திரம் விளக்கிக் காட்டுகின்றது. அவையாவன: சுத்த சைவம், அசுத்த சைவம் மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என்பன. இப்பிரிவு பிற்காலச் சைவ சித்தாந்த சாத்திரங்களில் இல்லை."[10]. "கடுஞ்சுத்த சைவருடைய இலக்கணங்களைத் திருமூலர் கூறியிராவிடில் நாயன்மார் பலருடைய செயல்கள் (கண்ணப்பர், சாக்கியர்) பித்துடையார் செயல்களாகக் காணப்பட்டிருக்கும்"[11]. நாட்டில் விளக்கமும், மதிப்பும் பெற்றிரா. நாம் வேறு எந்த நூலைக் கொண்டும் உண்மையறிந்திருக்க முடியாது.

---

9. சைவ சமய வளர்ச்சி-டாக்டர். மா. இராசமாணிக்கனார்- பக்கம்-206.
10. சைவ சமய வளர்ச்சி -டாக்டர். எம். இராசமாணிக்கனார் - பக்கம்-86.
11. சைவ சமய வளர்ச்சி-டாக்டர். மா. இராசமாணிக்கனார் பக்கம்-87.

பதினோராந்திருமுறையைப் பன்னிரண்டு சைவப் பெரியவர்கள் பாடினர். அப்பெருமக்கள் திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவநாயனார், கல்லாட தேவ நாயனார், கபில தேவ நாயனார், பரண தேவ நாயனார் இளம் பெருமான் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி என்பவராவார்கள். இத்திருமுறையுள் நாற்பது நூல்கள் உள்ளன. இந்நூல்களின் வைப்புமுறை தொன்று தொட்டு இப்போதுள்ள வரிசைப்படியே இருந்திருக்கிறது. சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் பன்னிரண்டாந்திருமுறையாகும்.

" மகாமந்திரங்கள் ஏழுகோடியாதற்கு ஏற்ப (கோடி—முடிவு) தேவார அடங்கன் முறை முதலில் ஏழு திருமுறைகளாக வகுக்கப் பட்டது. பின்னர் பதினொன்றாகத் தொகுக்கப்பட்டது. சங்கிதா மந்திரங்கள் பதினொன்றாதலின் இதுவும் பொருத்தமெனக் கொள்ளப்பட்டது." [12]. திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி ஆதிசைவர் மறையவர் குலத்தில் உதித்தவராதலால் இம்முறையினை அடிப்படையாகக் கொண்டு திருமுறைகளைப் பதினொன்றாகத் தொகுத்தார் என்பதும் பொருந்துவதொன்றாகும்.

பன்னிரண்டாந் திருமுறை சுந்தரர் வரலாற்றையும். அவரால் திருத்தொண்டத்தொகையில் குறிக்கப்பெற்ற அடியார்கள் வரலாற்றையுங் கூறும் பெருங்காவியமாகும். ஏறத்தாழ 4250 செய்யுட்களையுடையது. தமிழ்நாட்டில் சைவசமயம் பற்றிச் செய்யப்பெற்ற முதற்காவியம் இதுவேயாகும். சங்க காலத்திற்குப் பிறகு தமிழராகிய சேரழராட்சியில் தமிழ்நாட்டு நாயன்மாரைப் பற்றித் தமிழர் பாடிய தமிழ்க் காவியம் இஃது ஒன்றே என்பது அனைவர்க்கும் ஒப்பமுடிந்த முடிவாகும். இது மொழி பெயர்ப்பு நூலன்று திருத்தொண்டத் தொகைக்குத் திருத்தொண்டர் திருவந்தாதிவகைஎன்றும், திருத்தொண்டர்புராணம் விரியென்றும் சொல்லுவது மரபு

"ஒன்பது, பதினொன்றாந் திருமுறகளைத் திருவிசைப்பா, திருமாலை என்றும் சான்றோர் கூறுவர்." [13]. பதினோராந்திரு

---

12. தமிழ் இலக்கிய வரலாறு-பதினோராம் நூற்றாண்டு மு. அருணாசலம்-பாரி நிலையம்-முதற்பதிப்பு-14 – 4—71 பக்கம்-298.

13. 19-9-81-இல் திருச்சிற்றம்பலத்தில் திருவாளர் மு. அருணாசலம் அவர்களைச் சந்தித்து உரையாடியபோது அவர் கூறியது.

முறைக்குப் பிறகு தொகுக்கப்பட வேண்டிய சைவ இலக்கியங்கள் ஏதுமில்லை. "திருமுறைகள் அருள் நூல்கள்; அருள்பெற்ற ஆன்றோர்கள் அவற்றைத் தொகுத்தார்கள். அது காரணம் பற்றியே பிற்காலத்தில் திருமுறைகளைப் பெருக்குவதோ அல்லது அவற்றின் எண்ணைப்பெருக்குவதோ இல்லை. பெரியபுராணத்தின் சிறப்பினாலே அதனைப் பன்னிரண்டாந் திருமுறையாக அக்காலத்திருந்த பெரியோர் அமைத்தார்கள். பின்னர் எத்துணைச் சிறப்பான நூலாயினும் அதைத் திருமுறை என்று கொண்டதில்லை. ஆகவே சேக்கிழாருக்குப் பின் வந்த நூல் எதுவாயினும் திருமுறையாகாது." [14].

பன்னிரு திருமுறைகளில் முதல் ஒன்பது திருமுறைகளைத் திருக்கோவையார் நீங்கலாக இசைத்தமிழ் என்றும், ஏனைய மற்ற மூன்று திருமுறைகளையும் இயற்றமிழ் என்றும் மு. அருணாசலம் கூறுவர்.

நம்பியாண்டார் நம்பி முதல் ஏழு திருமுறைகளை இராசராச சோழன் காலத்தில் வகைப்படுத்தி முறை செய்தார். தேவார, திருவாசகப் பாடல்களை அடியார்கள் ஓதக்கேட்ட சோழ மன்னன் அவற்றை முழுமையாகக் கேட்டின் புற இறையருள் அவனைத் தூண்டியது. இராச இராசன் பட்டமெய்திய சில ஆண்டுகளில் நம்பியாண்டார் நம்பியின் துணைக்கொண்டு தில்லையில் மறைக்கப் பட்டிருந்த தேவார, திருவாசகங்களை வெளிக் கொணர்ந்தான். இராசராசன் பட்டமெய்திய ஆண்டு கி. பி. 985 எனின் தேவாரம் தேட ஆரம்பித்தது கி.பி. 995–இல் என்று கொள்ளலாம். நம்பி முதலில் விநாயகர் திருவிரட்டை மணிமாலை பாடியது கி. பி. 980-இல். இறுதியாகத் திருவிசைப்பா தொகுப்பு முடிந்தது கி பி. 1035-ல் இதனால் நம்பி காலம் சுமார் கி பி. 980-இல் தொடங்கிக் குறைந்தது கி. பி. 1035 வரையிலேனும் என்று கொள்ள இட முளது. இவர் 11–ஆம் நூற்றாண்டில் இருந்தார் என்பது பொருத்தமே. திருமுறைத்தொகுப்பு இவரோடு இந்தக்காலத்தோடு முடிந்து விட்டது. இதற்குக் கடைசி எல்லை இராசேந்திரன் காலம் (கி. பி. 1012 கி பி. 1044) திருமுறைகளில் விரிவும் சேர்க்கையும் இது வரையில்தான்-பிறகு இல்லை. இக்காலக் கணிப்பில் திருவாளர்கள் ஔவை. சு. துரைசாமிபிள்ளையும், சதாசிவ பண்டாரத்தாரும், சோமசுந்தர தேசிகரும் மாறுபாடு கொண்டவர்கள் என்பதை நினைவுபடுத்தாமலிருக்க முடியாது.

---

14. தமிழ் இலக்கிய வரலாறு பதினோராம் நூற்றாண்டு மு அருணாசலம்பிள்ளை. பக்கம்-295-296.

திருமுறைகளைச் சைவ சமயப் பெரியவர்கள் தங்களுடைய வேதமாகவும், மந்திர நூலாகவும், மருத்துவ நூலாகவும், வாழ்வைத் தூய்மைப்படுத்தும் நீதி நூலாகவும் போற்றிக் காத்தனர். அவர்கள் அத்திருமுறைமீது மதிப்பும், நம்பிக்கையும் வைத்திருந்தனர்.

'அவ்வினைக் கிவ்வினை' எனத் தொடங்கும் திருநீலகண்டப் பதிகம் பாடினால் விடம் நீங்கும் என்றும் சுரம் வராதென்றும் நம்பினர் அக்கால மக்கள். திருநீற்றுப்பதிகம் பாடினார்க்கு உடல் நலம் பெருகும் என்றும், 'பெண்ணமர் மேனியினாரும்' என்று தொடங்கும் திருப்பாண்டிக் கொடுமுடிப் பதிகம் பாடினால் திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் விரைவில் நடைபெறும் என்றும் மக்கள் நம்பினர். இவைபோல 'இடரினும் தளரினும்' என்று தொடங்கும் பொன் பெறு பதிகம் பாடினார்க்கு செல்வமுண்டாகும் என்று நம்பினர். கோளாறு பதிகம், கண்பெறு பதிகம் முதலியவற்றைப் பாடி வினையினையும், நோயினையும் நீக்கிக் கொண்ட சைவர்களிருந்தனர். இப்படிப்பட்ட நம்பிக்கையால் திருமுறைகள் அனைவராலும் ஓதப்பட்டு வந்தன. திருமுறைகள் சிவபெருமானுடைய பெருமைகளையும், அவனுடைய அருந்திறத்தினையும், அடியார்கள் இறைவனைப் போற்றிப் புகழ்வதையும் பற்றிக் கூறுகின்றன.

புராண வரலாறுகளையும், அக்கால மக்கள் பண்பாடு, கலை, முதலியவற்றையும் திருமுறைகள் விளக்குகின்றன. அக்கால மக்களிடத்தே நிலவி வந்த பழக்க வழக்கங்களையும் நாம் தெரிந்து கொள்ளத் திருமுறைகள் உதவுகின்றன. திருமுறைகள் சிவபெருமானைப்பற்றியே புகழ்ந்துரைக்கின்றன. பதினோராந் திருமுறையில் விநாயகருக்கும், முருகனுக்கும் கூட, பிரபந்தங்கள் உண்டு. "திருமுறையில் 325-க்கும் மேலான சிறந்த கோயில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் தில்லையும் திருவாரூருமே முதன்மை பெற்றனவாக விளங்கின. சைவ உலகில் தில்லைத் திருக்கோயில் முதலிடம் பெறலாயிற்று. அம்முதன்மை கருதியே நாயன்மார்களுடைய திருப்பதிகங்கள் தில்லையில் அடக்கம் செய்யப் பெற்றனவாதல் வேண்டும்."[15].

---

15. சைவ சமய வளர்ச்சி: டாக்டர். மா. இராசமாணிக்கனார்- பக்கம்-139.

திருமுறைகளும் அவற்றின் ஆசிரியர்களும்

திருமுறை ஆசிரியர்கள்	நூல்களின் பெயர்	திருமுறை எண்.
திருஞான சம்பந்தர்	தேவாரம்	முதல் 3 திருமுறைகள்
திருநாவுக்கரசர்	தேவாரம்	4, 5, 6, திருமுறைகள்
சுந்தரமூர்த்தி சுவாமிகள்	தேவாரம்	7 ஆம் திருமுறை
மாணிக்கவாசக சுவாமிகள்	திருவாசகம் திருக்கோவையார்	8 ஆம் திருமுறை
திருமாளிகைத்தேவர்	திருவிசைப்பா கோயில் 4 பதிகங்கள்	
சேந்தனார்	திருவிசைப்பா 3 தலங்கள் திருப்பல்லாண்டு	9 ஆம் திருமுறை
கருவூர்த் தேவர்	திருவிசைப்பா-பத்து தலங்கள்	
பூந்துருத்தி நம்பிகாட நம்பி	திருவிசைப்பா 2 தலங்கள்	
கண்டராதித்தர்	திருவிசைப்பா-கோயில்	
வேணாட்டடிகள்	திருவிசைப்பா-கோயில்	9 ஆம் திருமுறை
திருவாலியமுதனார்	திருவிசைப்பா - கோயில் 4 பதிகம்	
புருடோத்தமநம்பி	திருவிசைப்பா-கோயில் 2 பதிகம்	
சேதிராயர்	திருவிசைப்பா-கோயில் 1 பதிகம்	
திருமூலர்	திருமந்திரம்	10 ஆம் திருமுறை

திருவால வாயுடையார்	திருமுகப்பாசுரம்	
காரைக்கால் அம்மையார்	திருவாலங்காட்டுப் பதிகம் முதலான மூன்று பிரபந்தங்கள்	
ஐயடிகள் காடவர் கோன்	க்ஷேத்திரத்திரு வெண்பா	
சேரமான்பெருமாள் நாயனார்	பொன்வண்ணத் தந்தாதி முதலான மூன்று பிரபந்தங்கள்	
நக்கீரர்	திருமுருகாற்றுப் படை முதலான பத்து பிரபந்தங்கள்	11 ஆம் திருமுறை
கல்லாட தேவ நாயனார்	திருக்கண்ணபபதேவர் திருமறம்	
கபில தேவ நாயனார்	மூத்தநாயனார் திரு விரட்டை மணிமாலை முதலியன மூன்று பிரபந்தங்கள்.	
பரண தேவ நாயனார்	சிவபெருமான் திருவந்தாதி	
இளம்பெரு மானடிகள்	சிவபெருமான் திரு மும்மணிக்கோவை	
அதிராவடிகள்	மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை	
பட்டினத்துப் பிள்ளையார்	கோயில் நான்மணி மாலை முதலாக ஐந்து பிரபந்தங்கள்	11 ஆம் திருமுறை
நம்பியாண்டார் நம்பி	திருநாரையூர் விநா யகர் திருவிரட்டை மணிமாலை முதலிய பத்து பிரபந்தங்கள்.	
சேக்கிழார்	திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம்.	12 ஆம் திருமுறை

பாரதி கற்பனைத் திறனில் காதல் பொலிவு.

(குயில்பாட்டு)

K சோமசுந்தரம் B.A., B.L, தஞ்சை.

பாரதியாரின் குயில்பாட்டு இலக்கியப் பண்போடு கூடிய உயர்ந்த குறிக்கோளுடன் மெய்யறிவையும் அதன் ஒளியையும் ஒருங்கே வழங்கவல்லது. இத்தகைய குறிக்கோள்களை, காலத்திலும் இனியகற்பனையோடு பாரதியார் குழைத்து நயம்பட இக்கவிதையில் நாடகப் பாங்குடைய நலனும் பொதுவாக யாத்துள்ளார். கவியின்பக் கனிவோடு கலையழகு வாய்ந்த இக்கவிதை, காதல் பண்பாட்டின் பிழம்பாகவும், கற்பனையாற்றலின் முடிமணியாகவும் மாண்புடன் வழங்குவதாகும். இலக்கியக் கலையுணர்வில் காதல் கற்பனையின் வற்ரு ஊற்ருக வகைப்படுத்தி அன்பில் நிகழும் அகத்திணையொழுகலாற்றின் நுட்பத்தை வாழ்க்கை உண்மைகளோடு, பாரதியார் தமது உள்ளத்து உறுதியில் கனிந்த அனுபவத்தையும் பிறருக்கு உணர்த்தும் முறையில், இக்கவிதையினை கற்பனைச் சிறப்பால் மிளிரப் படைத்த நோக்கும் போக்கும் இறும் பூதற்பாலது.

சொற்பத்தால் உணர இயலாத காதலியல்பின் கூறுபாடுகளினைப் பற்றிய சிந்தனை யாவையும் காரிய காரணம் பற்றித் தோன்றும் கற்பனை வகையால், பாரதியார் காதற்பண்புகளைப் புத்தம் புதிய தோற்றப் பொலிவுடன் சுவைபட புனைந்துரைக்கும் திறன் போற்றற்குரியது. காதலும் கற்பனையும் கலந்துறவாடினல், கற்பனையில் காண இயலாத புதியதொரு வாழ்வு செழித்தோங்கி வளர்ந்து மலருமென்பது பாரதியாரது கருத்தாதல் பற்றி, அவரது கற்பனை, கற்பவர்க்கு இன்பம் பயக்கும் பான்மையது. பாரதியார், தனது குயில்பாட்டு, கலையுரைக்கும் இன்பக் கற்பனையில் சூழ்ச்சியாக வீறுமிக்குடைய தாய் தோன்றியதெனக்குறிப் பிடப்பட்டுள்ளது இவண் கருதற்பாலது.

' மாலையழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சியென்றே கண்டு
கொண்டேன்
ஆன்ற தமிழ்ப் புலவீர், கற்பனையே யானலும்
வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே யிடமிருந்தாற் கூறீரோ ?

கற்பனையோடு தொடர்புடையதாகப் புனைந்த இக்கவிதைப் பாட்டின் சொல்லாட்சி, வன்மையின் அமைப்பு, காதற் பண்பு களையும், அகப்புற ஒழுக்கங்களையும் பல்சுவையும், கவிநயமும் கருதிப் பாராட்டும் தகைமையுடையதாய் இலங்கி, கற்பனையின் எழிலையும் ஏற்றத்தையும் மாசுரு வகையில் பெருக்கி, காதலறத்தை மக்களுக்கு ஊட்டும் அடிப்படையினையுடையது உலகியலில் நிகழும் இன்ப துன்ப மாய காதல் வாழ்க்கை உணர்வினையும், உண்மை யினையும், மெய்பாடுகளையும், அவற்றின் மாறுபாடு செயல்களையும் இக்கவிதையின்கண் இசையபுபடுத்தி, புகைப்படமாக்கி பாரதியார் காட்டியுள்ளது, அதிசய அழகினைக் கூட்டும் பெற்றிமையினை யுடையது.

இத்தகைய நயமிக்க அழகால் விரிந்து வளரும் கவிதை மலரவே, அஃது சிந்தனைக்கு விருந்தளிக்கும் கருத்தியல் கலைவடிவ மாகவும், தெய்வீகமாகவும் பொலிவுற்று உணர்வு நல்கும் கற்பனை நடையோட்டத்தை இயல்பாய் உடையதாகின்றது. அதுபோது, கவிதை ஆன்மீகச் சார்புடையதாய் விளங்கி காதற் சுவையுணர் வோடு இயங்குவது உணரப்படும். இத்தகைய காதற்சுவையுணர்வு களைச் சுவையுடனே கற்பனை நலங்கனிந்து குயில் பாட்டினிலே கம்பசித்திரமாக செழித்தும், கம்ப சூத்திரமாக தழைத்தும் விளங்கு வது கண்கூடு, மற்றும் மாசறு காதலில் வயப்பட்ட காதலன் தன் காதலியை வியந்து பாராட்டும் முகத்தால் எழுந்த சேக்ஸ்பியரின் கவர்ச்சி மிகு காதல் கருத்துக்களும், காளிதாசரின் களிப்பு மிக்க காதல் கொள்கைகளும் ஒத்திசைந்து, பாரதியாரின் குயில் பாட்டின் கண் நிழலாடுவதைக் காண இயலும். எனவே குயிற்பாட்டு இன் புறுத்தும் இயல்போடு அறிவுறுத்தும் அருளாற்றலும் மிக்குடைய தென்பது ஒரேவழி உணரப்படவே, பாரதியாரின் நெகிழ்ந்து உருகும் கலையுள்ளம் எத்தகைய பண்பும் பயனும் வலியும் பொலி வும் கொண்டுள்ளதெனச் சற்றே நினைந்து தெளியப்படும். மற்றும் பாரதியார் தன்னுள்ளத்திலே இயல்பாய் அரும்பி மலரும் காதலு ணர்ச்சிகளுக்கு கலைவடிவம் அளித்து, ஒளி நலத்தால் விளக்கமுறும் படிசெய்து விடுகிறார்.

குயில்பாட்டு, பண்ணமைதியொடு இசை தோன்ற சுவைபயக்கும் கற்பனைக்கு, அழகையும் அறநெறி வழிவரும் காதலின்ப மலர்ச்சி அறிவிற்கு ஒளியையும், ஒருங்கே அளிக்க வல்லது. கற்பனையினை வளமுறச் செய்ய, இப்பாட்டு காதல் மன எழுச்சிகளாகிய உளச் சுவைகளைப் பண்படுத்தும் இயல்பினைப் பெற்றுள்ளது. கற்பனை யாக நிகழும் புனைந்துரை நாடக வழக்காலும், உண்மையாக நிகழும் உலகியல் வழக்காலும் நெறிபட்டு, உண்மை அறிவினைப்

பொருந்தித் தழுவிய இலக்கியமாக இப்பாட்டு திகழ்கின்றது. இப் பாட்டினில், நாடகம் போல் பலநலமுடைய அறமுறைமைக்குரிய அழகிய பகுதிகளும், உண்மையியல் வழாது அறிவு நலத்தோடு கூடிய புனைந்துரை வகைகளை தெளிவாய்க் கூறும் தொகுப்புகளும், வாழ்க்கைக்கு ஊக்கம் அளிக்கும் வாய்ப்புடையனவாய் இருப்பதினால், அவை கற்போரது மனவுணர்ச்சிக்கும், முற்போக்கிற்கும் ஊறு நேராதவாறு உயிர்ப்பூட்டி அவரது கருத்திற்குத் தக்க திருத்தமும் தோன்றச் செய்யும் பான்மையன. இயல் இசையடியாகப் பிறக்கும் நாடகப் பண்பினை நாடும் கருத்தோடு, கவிதைப் பண்பினைச் சிறப்பாக இப்பாட்டு பெற்றுள்ளதினால், சமயங்களில் திகழும் தத்துவ உட்பொருள்களை இதன்கண் அறிவு உள்ளத்தோடு எதிர்பார்க்கச் செய்கின்றது. எனவே, இஃது காதற்பண்பினையும் கலையினையும் கற்பனையோடு விளக்கும் வீறுபெற்ற வியன் புலமை சான்ற பாட்டாகும் எனக்கொள்ளுதல் மிகையாகாது.

பாரதியாரின் குயில்பாட்டு கற்பனையை கருமுதலாகக் கொண்டு, காதல்-சாதல் மூலம் மக்களை அறிவுறுத்தி மகிழ்விப்பதைக் குறிக்கோளாக அமைய எழுந்தது. பாரதியார் தன் கற்பனைத்திறன் வழி காதல் கருத்துக்களை கவர்ச்சி மிக, கவிப் பண்போடு, இக்குயில் பாட்டை, காதற்சுவையின் கவிதை ஊற்றாக புதுமைப் போக்குடன் யாத்துள்ளார். கவிதைக்குரிய கவர்ச்சியும் கருத்தழகும், பாரதியாரின் கற்பனை நயத்தையும் நலனையும் தெளிவாக்கி, குயிலின் குக் குக் கூ எனக் கொஞ்சும் குரலை கவியுலகில் நிலைத்த பயனையும் மாட்சிமையினையும் எய்துமாறு செய்துள்ளன. இதனால் இக்குயில் பாட்டு, படைப்புக் கற்பனைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக இயங்கியுள்ளது. இசைப் பறவையாகிய பெண் குயிலின் மென்மையான உள்ளத்தையும், உள்ளத்துணர்ச்சியையும், காதற் பண்பின் நலத்தையும், காதலன்பின் ஆழத்தையும் ஆன்மீகத் துறைகளின் வழி பாரதியார் புலப்படுத்தி, உபநிடத்தின் சாரமாகிய ஞான அறிவு பெறும் வகையில் வாழ்வும் சாவும் எத்தன்மைத்தென்பதை தன் கவிதைப்பாட்டின் மூலம் சங்கநாதமிட்டார். எனவே, ஆக்கக் கற்பனையில் கவியின்பமும் உயிர்த் தத்துவமும் ததும்பும் இப்பாட்டு இலக்கிய எழில் நலங்கனிந்த கற்பனைக்கருவூலம்.

கற்பனைத்திறனைப் பயன்படுத்தி, உலகியலில் நிலவிவரும் உண்மை நிகழ்ச்சியினை, கேட்பாரது உள்ளத்தில் நன்கு பதியும் வண்ணம் குயில்பாட்டை பாரதியார் உணர்ச்சிமிகுமாறு சொல் வளமும் பொருட்செறிவும் ஒலிநயமும் புலப்பட சிறப்புமிக்க அறிவுத்திறனால் பாடியருளினார். மற்றும் அவர் குயிலின் மெல்லி

யல்புகளை, தானுணர்ந்த முறையில் மகிழ்ச்சியுற்று, கற்பனையாய அதன் பாட்டில் விளங்கும் வாழ்விற்குரிய நயனுடைய கருத்தியல்களை உவமை உருவகம் வாயிலாக ஒழுங்காய் சித்தரித்து புத்தொளி தரும் ஏகதாளத்திற்குரிய சங்கராபரணம் இசையால் மனோபாவப்படி இயங்க வைத்து விடுகிறார். இதன்வழி புலனுணர்வுகளில் அமைந்து கிடக்கும் ஆன்ம இயல்புகளை நினைவாற்றல் வழி செயல் படும்படி பாரதியார் செய்து விடுகிறார். அதனில் ஈடுபடுவாரையும் பயனுறும் வகையில் தெய்வீகமாக்கவல்ல வழி முறையினையும் எடுத்துக்காட்டுவர். இதனை உணர்ந்தவர் செல்வருட் செல்வர்; உணராதார் வறியரில் வறியர். விழுமியது பயக்கும் கற்பனை, பொதுவாக வாழ்வு வகைகளிலே அளாவி நின்று, உயிர்ப்பண்பினையும் உண்மை அறிவினையும் செம்மைப்படுத்தி, கருப்படும் உயிர்களுக்கும் ஊதியமளிக்கும், முறைபிறழ்ந்து, வெறுமையாய் நிற்கும் கற்பனை, கவிதைச் சார்பிலாது வாழ்விற்குரிய ஆன்மீக நன்மையினை என்ஞான்றும் பயவாது வாழ்க்கை முரிவாய் விடுமென்பது ஒருதலை. சிந்தனைத்திறனுக்கு விருந்தளிக்கும் கற்பனை, வாழ்வுக்கேற்ற மரபு வழிவந்த ஆன்மீகக் கருத்துக்களோடு பொதுமைச் சிறப்புடன் குயில் பாட்டின் கண் விளங்குவதால், அஃது கலை இயலோடு ஆன்மீக உணர்வின் விளக்கத்தினை ஓரளவுக்கு எடுத்துக்காட்டும் வன்மையினையுடையது. இத்தகைய ஆன்ம விளக்கம் அலையும் மனதை நிலைப்படுத்தி வியக்கத்தக்க வகையில் அமைதியினைப் பெருமளவில் நிலவச் செய்து விடுகிறது.

ஆன்ம தத்துவ உணர்வுக்கு கிளர்ச்சியினையூட்டிப் பெருக்கச் செய்துமுடிவில் மன அமைதியினை நிலையுறுத்த, கற்பனை உறுதுணையாதலைக் கண்டு கொண்ட பாரதியார், காதல் வாழ்வில் உண்மை அமைதியினைக் காணும் விழைவில், கற்பனை ஆற்றல் பரவலாக செயல்படும் வகையினையும் உணர்ந்தார். கற்பனையின் இத்தகைய செயற்பாட்டினை பாரதியார் கூர்ந்து நோக்குமிடத்து, கற்பனையின் ஆற்றல் கடவுளின் படைப்பு ஆற்றலுக்குச் சமம் எனத் தன் மனதுக்குத் தெற்றெனத் தென்பட்டது. சிந்தனையைத் தூண்டும் திறன் மிகு கற்பனை, இலக்கியத்தில் இன்பவூற்றாக இருப்பதையும் பாரதியார் தேர்ந்தார். உயிரினும் பெண்மையின் இனிமையினை உயர்த்திப் பெண்ணால் கடவுள் நிலை எய்த வேண்டுமென்ற கருத்தால், காதல் பெண்ணியலாரால்தான், தெய்வீகசக்தி வீறுடன் விளங்க வேண்டுமெனத் தெளிவு கொண்டார். பின்னர் ஞான வெளியில் ஞான ஒளியினை வென்று ஒளிரும் காதலின்பத் தத்துவத்தைப் பெண்குயில் மூலம் இனிமையுற விளக்க எண்ணினார். பெண்ணின் பெருந்தக்கதைப் போற்றி, இனிமை நிறைவாய

காதலின் உட்பொலிவின் தத்துவக் கருத்தை, கற்பனை வளத்தின் வழி, பாராட்டும் வகையில், நீடித்த இனிமை தரும், கவிதைக்கனி பிழிந்த

சாற்றினிலே, பண் கூத்தெனு மிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, யதனோடே யின்னமுதைத் தான் கலந்து,
காதல் வெயிலிலே காய வைத்த கட்டியினால்
மாதவனின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்.'

எனப் பாரதியார் அறிவுறுத்துவது இப்புறற் பாலதாயுள்ளது.

தாயின் செல்லத்தை வாய்க்கப் பெறாத பாரதியார் (வயது 14) செல்லம்மாளை (வயது 7) மணம்புரிந்த பின்னர், அவருக்கு இயல்பான காவடிச் சிந்து மெட்டில் ரசிக்கத்தக்க முறையில், கேளிக்கையாகவே, காதல் கீதம் இசைக்கத் தொடங்கினார். அவரது இளங்காதல், அக்காலத்திலே இப்படி ஒரு இளங்கவிதையைத் தூண்டிற்று.

' தேடக் கிடைக்காத சொன்னமே — உயிர்ச்
சித்திரமே ! மட அன்னமே !
கட்டியணைத் தொரு முத்தமே — தந்தால்
கை தொழுவேன் உனை நித்தமே'

என அகத்துள் உறையும் நிறைகாதலன்பால் தனது வருங்கால வாழ்வில் திளைக்கப்படும் இன்பத்தை முன்னறியும் திறத்தால், தன் மனத்திரையில் கண்டு மகிழ்வார் ; பூரிப்பார் ; மையலுறுவார்.

காதலுறுதல் உயிரியற்கை எனக் கொண்டு உடலுக்கும் உயிருக்கும் எத்தகைய இன்றியமையாத உறவு உளதோ, அத்தகையது இருகாதலருக்குமுள்ள அன்பு உறவு எனப்பாரதியார் தெளிவுறுத்துவார். பொதுவாக, அறிவும் உணர்வும் அமைதியும், அன்பால் ஒருங்கே வளர்ந்து சிறக்கும்படி வாழ்க்கையை உயர்த்த வல்லது காதலென்பதும், அஃதே உலகுய்ய தன்னலமற்று தொண்டு செய்விக்கும் ஆற்றலுடையதென்பதும் பாரதியாரது அடிப்படைக் கருத்தாகும். அதனாற்றான், பாரதியார் காதலின்பம் கலந்தணைய, காளையீர் !

ஆண்மை வேண்டின் மணஞ் செய்தலோம்புமின்' என காதலின் உலகியல்பு துணிந்து கட்டளையிட்டனர். மக்கள் வாழ்க்கையினைப் பண்படுத்தி சிறக்கவும், காதலற நெறிகளை அன்பு முறையில் எளிதாகக் கற்றுணரவும், அறிவும் உணர்வும் கலந்து பட்ட பயனைப் பெறவும், காதல் கற்பிக்கின்றதை, பாரதியார்

குயில் பாட்டில் குறிப்பாக உணர்த்தி, காதலின்பக் கூறுகளின் சிறப்பெல்லாம் தோன்றுமாறு புலப்படுத்தியுள்ளார்.

'காதலோ காதலினிக் காதல் கிடைத்திலதேல்
சாதலோ சாத'லெனச் சாற்றுமொரு பல்லவி'

இப்பாட்டில் இழைந்தோடுவதைக் காண இயலும், காதல் பெறும் கீர்த்தியினையும், காதல் வளர்க்கும் நாண் நெறியினையும், காதலர் வாய்ச் சொற்களில் வைத்து பாரதியார் நனி நாகரிக நயமுடன் இன்பக்களியேறுமாறு எடுத்துரைத்துள்ளார்.

காதலைப் பற்றிய பாரதியாரது கீழ்கண்ட சில துணுக்குகள்,

'காதல் அருள் புரிவீர்'
காதலை வேண்டி கரைகின்றேன்
கண்டதுமே பெருங்காதல் : கொண்டதுமே பேதக்காதல்
ஆசை (காதல்) தான் வெட்கம் அறியுமோ !
காமனுக்கே சாதிப் பிறப் புத்தராதரங்கள் தோற்றிடுமோ!
காதலுற்ற செய்தியினை மாதர் உரைத்தல் வழக்கமில்லை
காதலில்லையாகுல் கணத்திலே சாதல்
காதலிலே ஐயங்கலந்தாலும் நிற்பதுண்டோ ?
காதல் வழிதான் கரடுமுரடாமென்பர்,

நினைத்தற்குரியன. காதலறிவு, மக்கட்கு பல்வகையால் அமைந்துள்ளதினுள், காதல்கருத்தினைக் கவ்வும் வகையிலும், அறிவிற் பதியும் முறையிலும், நடைபலவாய்க் கொண்டு பாரதியார் காதலைப்பற்றியும் கூறியிருந்தாலைச் சற்றேற சிந்தித்தல் வேண்டும். நெஞ்சம் விரும்பிய நிலையில் உள்ளப்புணர்வால் ஆவிகலப்பதே காதல் என்ற நுண்மையாய தமிழ்மரபின் சூக்குமத்தை

எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
'கண்ணொடு கண்ணினைக் கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறுது உணர்வும் ஒன்றிட.
அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்'

எனக் கம்பர் காட்டும் காதலது சித்திரத்தின் காட்சியில் தோய்ந்த பாரதியார், அதன் எதிரொலியை.

நின்னையவன் நோக்கினான் ; நீயவனை நோக்கி நின்றாய்
அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்து விட்டீர்'

என்ற காதல் சித்திரத்தில், இவ்வெழுத்தில் காதலின் பல பொருள்கள் தெரிக்கும்படி வெகு அழகாக விளங்குமாறு கேட்க

வைத்தார். காதலிருவர்கள் கூற வேண்டியவற்றை அவர்களது கண்கள் ஏற்றுக்கொண்டு ஒன்றையொன்று கவ்விக்கொள்ள, மனப்பார்வையால் இரு இதயங்களும் காதல் காரணமாக உள்ளப் புணர்வால் கட்டுப்பட்டு விட்டதை பாரதியார் இங்கு, மாட்சிமைப் படும் அரியகுறிப்பின் வழி, கண்வழிப்புகுந்து நெஞ்சத்தளவில் நிகழும் நட்பாகிய காதல் தத்துவத்தை உணர்த்தி விடுகிறார். 'நோக்கு' எனும் நுணுக்கப் பொருளைப் பற்றிய தனியுண்மையை அகப்பொருள் இலக்கிய நெறிகொண்டு நன்கு விளங்கக் கண்ட பாரதியார், மும்முறை அச்சொல்லை எடுத்தாளும் உரிமையால் 'அன்னதொரு (மேல்) நோக்கினிலே ஆவிகலந்து விட்டீர்' என இருவரும் மாறிப்புக்கு நெஞ்சம் எய்தியதைக் கூறி, காதல் விழைவில் படர்ந்துள்ள தூய்மையினையும், அன்பில் விளைந்த பற்றுள்ளத்தையும் ஆவிக் கலப்பின் வழி எடுத்துக் காட்டுவா ராயினர். இஃது இலக்கிய எழிலை மிகுவித்து, ஈண்டு இன்பப் பூரிப்புடன் சுவை பயப்பதாகின்றது.

இவ்வாறு காதலினைப் போற்றும் பாரதியார், உள்ளத்தைப் பிணிக்கும் உள்ளுணர்வில் தோன்றும் காதல், நீடித்து, நிலையறம் சுட்டி நின்று மனநிறைவு அளிப்பதென்றும், ஐம்புலன் உணர்வாய, முழுகாதலுள்ளத்து அன்பு, காதலரின் காதலிலே, இணையிலா இன்பங்கொள்ளும் உரிமையோடு கூடிகொண்டுள்ளதென்றும், காதலிக்கும் காதல் காதலித்தே தழைத்து நிற்பதென்றும், அஃது நிலையற்ற சிற்றின்பத்தில் துய்த்து ஆழ்ந்து விடாது, பேரின்ப இறை நிலையினை அணுகும் ஆற்றலோடு, பகுத்தறியும் பான்மையால் தன்னை எக்காலத்தும் புதுப்பித்துக் கொண்டு இயற்கையின் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொது நெறியினையுடையதென்ற ஒரு கொள்கையினை வகுத்துக் கொண்டார். மற்றும் இவர் இப்பொது நெறியினைக் கொண்டே சங்க காலத்து நலங்கெழுமிய காதல் கருத்துக்களுக்கும் காதலின் பயனுக்கும், காதலறிவின் பொருளுக்கும் மெருகு கொடுக்கும் வகையில், உலகில் நல்வ வண்ணம் வாழ, குடும்ப வாழ்க்கைக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, உணர்வும் அறிவும் ஒத்த அளவில் பண்பட்டு வளர்ச்சியுறுமாறு, காதல் மெய்மைப் பயிற்சியளிப்பதைத் தெளிவுறுத்தி, காதல வாழ்வினை கலையுணர் வோடு கனித்தலே, காதல் கற்பிக்கும் பண்பாடெனப் புலப்படுத்தி யுள்ளார். இவற்றையாவையும் காதலறமாகக் கொண்டு கவிநயம் திகழக் கரைவது குயில் பாட்டாகும்.

சமவாழ்வுத் தத்துவத்தை எடுத்துக்காட்ட வல்லது காதலுணர்ச்சி யென்பதைக்கண்டு கொண்ட பாரதியார், எவ்வுயி

ரிடத்தும் இயைந்துள்ள இக்காதலுணர்வு அறிவு நெறியில் இயங்கி ஆன்ம வளர்ச்சிக் கேற்ப, வளர்ச்சி யெய்துதல் இயல்பு என்பதை பாரதியார் உணர்ந்தார். உணர்ந்தவழி, அவர்தனக்கு இயல்பாக அமைந்த கற்பனைத்திறனாலும் ஆற்றலாலும், காதலின் ஒழுக்க இயலை அறிவியலாகக் கையாண்டு அதனை கருத்து, சொல் இனிய சந்தம் எனும் முறையமைப்பில் தெளிய வைத்தார். மற்றும் கற்பனைக்கு பிறப்பிடமாய் காதலைவைத்து, அதற்கு பாரதியார் சிறப்பிடம் அளித்து, வாழ்க்கைக்குச் சீரிய விளக்கமாகவும், சமய தத்துவத்துக்கு ஆழ்ந்த பொருளாகவும் காதல் தத்துவம் இருப்பதை உணரவைத்தார். காதல் தத்துவத்தை உள்ளபடி உணர்ந்தால் தான், அகவாழ்வும், புறவாழ்வும் சிந்தைத் தெளிவால் பொலிவுறும் என்பது பாரதியாரின் சித்தாந்தம். இருமையில் ஒருமையினை உணர்ந்து வாழக்கற்பது காதலறிவாதலால், அஃதே வையத்தின் தாழ்வுகளைச் சிதறடித்து, வாழ்வில் காதலன்பியலைக் காணும் நற்பேற்று செழிப்பினையும் சிறப்பினையும் பெறச் செய்யும் என பாரதியார் அறிவுறுத்துவாராயினர். கற்பனையில் தொடுக்கின்ற சிந்தனைவழி, பாரதியார் தோற்றுவிக்கும் காதலின் பண்பாட்டு ஒழுக்கத்து மேம்பாட்டினைக் கூர்ந்து நோக்கின், கவிப்புனைவுடன் அரவணைத்து நிற்கும் அவரது கற்பனை நலன் அசையாத உறுதியொடு கூடிய காதலன் பின் தத்துவத்தை வெளிப்படுத்தும் நுட்பம் புலப்படும். இதனைற்றான் பாரதியார், 'கற்பனையாம் தேரேறி கனவுலகில் சஞ்சாரம் செய்து அற்புதமாய் கண்ட காதலியலை அழகொழுக இசை நிறை மொழியில் பொருந்தச் சொல்லும் புகழ்மை' படைத்தவராய் வயங்கித் திகழ்ந்தா ரென்க.

பிறப்பின்பம் நுகரும் நெறியினை பாரதியார் விளக்கு முகத்தான், ஒத்த அன்புடைய காதலரின் குடும்ப வாழ்க்கைக் கொள்கைகளுக்கு மிக்கதோர் சிறப்பிடம் கொடுத்து, இல்லறத்தின் உயர்வைச்சுட்டிக் காட்டியுள்ளார், இல்லற வாழ்வுடையார் காதலுணர்வின் நுண்ணிய செவ்வியினை நன்குணர்ந்து உயிரின் பத்துறைக்குரிய நுட்பப்பயனை, இறைமனத்து நலமாகப் பெற வேண்டி, குடும்ப இல்லறத்து இயல்பு நெறியாகிய காதலுணர்வு திரிபு உணர்வாக மாருதவாறு இல்லறத்துப் பெருமாட்சியினை விளங்க வைத்தார், வரட்டுத்துறவொழுக்கம் பாரதியாருக்கு உடன் பாடன்று, அவருக்குத் துறவு நெறி இயற்கைக்கும் புறத்தாறு, மற்றும் அவருக்கு அது அறிவுக்கும் பொருந்திய தாகாது. ஆனல் பயனுடைய தன்னகத்துறவு நிலையும், தான், தனது எனும் தற்பற்றற்ற இயல்பு நெறியையும் விட்டு விடாது பேணும் இல்லற வாழ்வின் ஒழுங்கியலை. காதலறத்தின் மேம் பாட்டிற்காக, பாரதியார் வற்புறுத்துவர், எனவே, ஞாலத்து

மக்களே, இல்லறத்தார் தன் குடும்பமாகவும் பாவித்தும் அரவணைத்தும், நிலையாமையறிந்தும், இறை இயல்பு உணர்ந்தும் இல்லற ஒழுக்க நெறியில் நின்று, துறவற ஞான விழுப்பத்தைப் பெறுதல் இல்லறத்தார்க்கு உரியாதாகின்றதென்பது பாரதியாரின் கோட்பாடு.

இத்தகைய சூழ்நிலையில், உள்ளம் ஒன்றிக்களித்து, காதலின்ப வாழ்வு மாசற உயரும்படி கருத்தொரு மித்த காதலர்கள் ஒருவரை யொருவர் அன்புருவாக காண்பவற்கு தெய்வ நிலை கிட்டுமென்பது பாரதியாரது உடன்பாடு, இதனை சாகாது உய்ந்த சேர இளமன்னனும் சின்னக்குயிலியுமாகிய காதலர்கள் ஆரத்தழுவி அமரர் நிலையெய்தியதின் மூலம் உணர்த்தி, மதியுடைமையொடு உள்ளம் ஒன்றுதும், மெய்க்காதல் இல்லாதும் நின்ற மாடனும் குரங்கனும் மாயப் பிசாசுகளாய் அலைந்தும் திரிந்தும், மீண்டும் மீண்டும் பிறத்தலாகிய சாதலின் வழி தவிப்பதைப் பாரதியார் நுட்பமுற வியக்கத்தக்க வகையில் கவிதையினை வளர்க்கும் நோக்குடன் கற்பனையும் வர்ணனையுங் கொண்டு எடுத்துக் காட்டியுள்ளார், மற்றும் காதல் நெறியோடு வையத்தே வாழ வேண்டிய அறத்தின் வழி வரும் முறைகளையும் துறைகளையும், அன்பின் அடிப்படையில் வைத்து நாகரிகப் பண்பாட்டுடன், அன்பால் வளரும் காதல் வாழ்வியல்புக்கு ஏற்றதாகவுள்ள இறையருள் இன்றியமையாமையினையும் பாரதியார் குறிப்பாக எடுத்தியம்பியுள்ளது இறும் பூதற்பாலது.

காதலது இயற்கையின் கவின்மிகு காட்சிகளையும் அதன் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளையும், பாரதியார் தம்முள்ளம் ஒன்றிய நிலையில் கண்டுணர்ந்து அனுபவித்ததை, கற்பனை உணர்ச்சியோடு வளமுறக்குழைத்து, கவிதையின் மெய்ப்பொருளைத் தனிப் புதினமாகப்படைத்து அளிப்பதினால், அஃது அழகுணர்ச்சியை தூண்டுவதோடமையாது, இன்பவுணர்வினையும் வியப்புற நல்குவதாகும், மற்றும் அவர் வழங்கும் கருத்துக்களும் கலையுணர்ச்சிச் சொற்களும் கவிதைக்கு இனிய யாப்புமுறையோடு உயிரோட்டம் அளித்து, அமைதி வாழ்வினை வனப்புடன் வளமுறச் செய்யும் பான்மையுடையன, காதலும் அதன் கடவுட்டன்மையும் முன்னைப் பழமைக்கும் பழமையதாகவும், பின்னைப் புதுமைக்குரிய புதுமையாகவும் முடிவிலாது உள்ளார்ந்து விளங்குவது போன்று, பாரதியாரின் குயில்பாட்டு, கற்பனை கடந்த அற்புதச் சிறப்புடன் முடிவுறாத இயல்புடைய பண்பில் உறைந்துள்ளது.

பாவேந்தரின் குடும்ப விளக்கு ஒரு நாள் நிகழ்ச்சி

இராம. சுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட். எஸ்ஸி., பி. எல்., டி. எச். இடி.,
7, தீத்தாரப்ப முதலிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005.

'குடும்ப விளக்கு' பாவேந்தர் படைப்புகளுள் தலைசிறந்து நிற்கிறது. 'குடும்ப விளக்கு' நூல் ஐந்து பகுதிகளும் பல்வேறு காலங்களில் ஆக்கப் பெற்றதாகும்.

முதற்பகுதி	:	ஒருநாள் நிகழ்ச்சி	(1942)
இரண்டாம் பகுதி	:	விருந்தோம்பல்	(1944)
மூன்றும் பகுதி	:	திருமணம்	(1948)
நான்காம் பகுதி	:	மக்கட்பேறு	(1950)
ஐந்தாம் பகுதி	:	முதியோர் காதல்	(1950)

பெருமக்களையும் வீரதீரச் செயல்களையும் கருப்பொருளாகக் கொண்டு கவிதை பாடினுல்தான் மக்கள் ஆர்வத்துடன் படிப்பார்கள் என்ற பழைய நம்பிக்கையைப் புரட்சிக்கவிஞர் 'குடும்ப விளக்கு' இயற்றியதால் தகர்த்தெறிந்திருக்கிருர். சாதாரண மளிகைக் கடைக்காரன் ஒருவனுடைய அன்ருட வாழ்வை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது, குடும்ப விளக்கு'. செயற்கரிய செயல்களோ, நம்ப முடியாதவையோ, வியப்பை விளைவிக்கின்றவையோ ஆகிய எந்த ஒரு நிகழ்ச்சியும் இல்லாமல் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண மனிதனுடைய சுவையற்ற வாழ்க்கையை எடுத்துக்கொண்டு சுவை மிகுந்த காப்பியத் துணுக்காக ஆக்க முற்பட்டு அந்த முயற்சியில் மாபெரும் வெற்றியையும் அடைந்தார் என்று சொன்னுல் அதைவிடச் சிறந்த ஒரு புகழ் மாலை கவிஞருக்கு யாரும் வழங்க இயலாது.

இத்தகைய ஒரு கருப்பொருளை எடுத்துக்கொண்டு பாடவே ஏனையோர் அஞ்சியிருப்பர். அப்படியே பாடியிருப்பினும் அது நின்று நிலவும் ஆற்றலைப் பெற்றிராது.

ஒரு கவிதை சிறப்படையக் கவிதையால் குறிக்கப்பெற்ற பொருளும் அப் பொருளைப் பாடும் கவிதையும் சிறப்பு உடையனவாக இருத்தல் வேண்டும். இவை ஒன்றுக்கொன்று தொடர்பு

உடையவை ; அங்ஙனம் அல்லாமல் உள்ளீடே இல்லாத ஒன்றை எடுத்துக்கொண்டு கவிதை புனைய முற்படுவது பாபெரும் துணிச்சல் தான். அதுவும் ஒன்று இரண்டு துண்டுப் பாடல்களாயினும் சரியே. அவ்வாறு இல்லாமல் நீண்ட நெடுங்கதையாக அதனைச் செய்ய முற்படுவது புரட்சிக் கவிஞரின் புரட்சி மனப்பான்மைக்கும் அவருடைய பேராற்றலுக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.[1] அம் முயற்சியின் பயனே 'குடும்ப விளக்கு' என்ற நூல்.

'குடும்ப விளக்கு' என்ற நூல் தோன்றுவதற்குப் பல்லாண்டுகள் முன்பே இதன் கரு கவிஞர் உள்ளத்தில் தோன்றி யிருக்கவேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. 1936 - இல் 'தகுந்த குடும்பம் சர்வகலாசாலை'[2] என்ற தலைப்பில் 34 கண்ணிகள் பாடியிருக்கிறார். அறுபத்தேழு அடிகளில் அமைந்துள்ள அந்தப் பாட்டின் வளர்ச்சியே இன்றைய சுடர்மிகு குடும்ப விளக்கு ஆகும். அதில்,

'பிள்ளைகளைக் கூட்டிப் போய்ப் பீடத்திலே யமைத்துப்
பள்ளிக்கு வேண்டியநற் பாடங்கள் சொல்லிவிட்டு
நல்ல கதையுரைத்து ஞாலப் புதுமைகளைச்
சொல்லி மகிழ்வித்தாள் தாயன்பு தாதன் முதல்
எல்லாரும் இன்ப உணவுண்டார் மக்களெலாம்
கல்விச் சாலைசெல்லக் கட்டும்உடைப் பொத்தலெல்லாம்
இல்லக் கிழித்தி எழில்தையற் காரியாய்த்
தைத்துடுத்தி விட்டாள்; தனது கணவனிடம்
அத்தினத்தில் ஆனபல ஆலோசனைபேசி"[3]

என்ற வரிகள் இடம்பெறுகின்றன. இக்கருத்தே 'குடும்பவிளக்கில்' விரிக்கப் பெறுகிறது. இவ்வழகிய 'பாவேந்தர்' குடும்பக் காவியத்தின் முதற்கதை; பாவேந்தர் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரி; தமிழுக்குப் பிறந்து தமிழுக்கே வாழ்க்கைப்பட்டவர். 'குடும்ப விளக்கு' தோன்றுவதற்குக் காரணமா இருந்தவர் என்று அந்நூலின் முன்னுரையில் குறிப்பிடப்படும் தலைவி திருமதி சரசுவதி கண்ணப்பர் அம்மையார்தான்.[4]

---

1. ஞானசம்பந்தன் (அ. ச). இன்றைய இலக்கியம், பக். 121-122.
2. முல்லைக்காடு (புதுச்சேரி, 1948). பக். 24-26.
3. மே. கா. நூ
4. முருகுசுந்தரம், தொகு அரும்புகள் மொட்டுகள் மலர்கள், அகரம், சிவகங்கை, 1980 பக். 56

"பாவேந்தர் தாம் எழுதும் பாடல்களுக்கு முதலிலேயே தலைப்புக் கொடுக்கும் வழக்கமில்லை. அவர் எழுதிப் போட்ட பாடல்களைக் கையில் எடுத்து 'நீயே ஒரு தலைப்பு வையேன்!' என்பார். காதல் நினைவுகள் தொகுதியில் உள்ள 'ஒரே குறை' என்ற தலைப்பு பொன்னி ஆசிரியர் முருகுசுப்பிரமணியம் வைத்த தலைப்பு 'குடும்ப விளக்கு' நான் சொன்ன தலைப்பாகும்".

முதற் பகுதியில் நல்ல குடும்பத்தின் 'ஒரு நாள் நிகழ்ச்சி' பேசப் படுகிறது. இப்பகுதி எழுதப்பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாம் பகுதியும், அதனை அடுத்துச் சில காலங் கழித்து மூன்றும் பகுதியும் எழுதப்பெற்றதாக அறிகிறோம். இறுதி யாக உள்ள ஐந்தாம் பகுதி 'முதியோர் காதல்' என்ற தலைப்பில் கடைசியாக எழுதப்பெற்றது.

கவிஞர் கருத்து

குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்.

முன்னேற்றம் உடைய குடும்பம் எப்படி இருக்கும் என்பது பற்றிய என் எண்ணந்தான் இந்தச் சிறிய நூல் !

நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் !

இந்நாளில் சிறிது கூடுதலான வருவாய் ஏற்பட்டவுடன், துணைவியர் உடல், நலங்காமல் உடை நலங்காமல், வேளைக்குச் சாப்பிடுவதுதான் குடும்ப ஒழுக்கம் என்று நினைத்து விடுகிறார்கள். பெண்களிடமிது பெரு வழக்கமாகி வருகிறது. கணவன்மாரும் இந்நிலை முழுத்தன்மை வாய்த்தது என்று முடிவு கட்டுகிறார்கள்.

கற்றலும், அதற்குத்தக நிற்றலும் நிறைய அமைந்திருக்க வேண்டும், துணைவியிடத்தும் கணவனிடத்தும்

இந்த நிலையில் அங்குத் தோன்றும் பிள்ளைகள் எப்படி இருப் பார்கள் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

இத்தகைய குடும்பத்தில், எடுத்ததற்கெல்லாம் வேலைக்காரன் வேலைக்காரி வேண்டாம். அனைத்துக்கும் பிறர் கையை எதிர் பார்ப்பது நிலையற்ற செய்கை ; எப்போதும் எதிர்பார்க்கக் கூடிய தன்று ; ஏனென்றால், எல்லாரும் வேலைக்காரர் அல்லது எல்லாரும்

---

5. கே. க. நூலில் கவிஞர் சுரதா அவர்களின் 'மார்கழியின் உச்சியில்' என்ற கட்டுரையில், பக். 14

உடையவர் என்ற நிலையை உண்டாக்கத்தான் அறிவுலகம் விரைந்து வேலை செய்கிறது. இவ்வையத்தின் நோக்கமும் அதுதான் !

குடும்ப விளக்கில் வேலையாட்களுக்கு இடம் ஏற்படுவதில்லை.

கதைச் சுருக்கம்

நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்; தங்கம்—மணவழகு என்னும் நடுத்தர வணிகக் குடும்பத்தினரை மையமாகக் கொண்டு செல்வது குடும்ப விளக்கு, தங்கம் பெயரில் மட்டுமன்றிக் குணத்திலும் இல்லற மாண்பிலும் அருளொழுக்கத்திலும் தங்கமாகவே காட்சி தருபவள் ; மணவழகு தங்கத்திற்கு வாய்ந்த தகுதிமிக்க துணைவன். வணிகத்தொழில் புரிபவன்.

தங்கம் வேலைக்காரியின்றிக் குடும்பத்தின் அனைத்துப் பணிகளையும் அயராது செய்கின்றாள் ; மாமன் மாமியின் நன்மதிப்பைப் பெறுகின்றாள். விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்றுச் சிறந்த முறையில் அன்பினைச் சொரிகின்றாள்.

வில்லியனூர்ச் செல்வர் மாவரசனும் மலர்க்குழலியும் நாவரசும் நகைமுத்தும் தங்கத்தின் வீட்டிற்கு விருந்தினராக வருகின்றனர் ; மணவழகன் மகன் வேடப்பனுக்கும் நாவரசின் மகள் நகைமுத்துவுக்கும் காதல வளர்கின்றது ; திருமணத்தில் முடிகின்றது.

திருமணம் தமிழர் முறைப்படி— புரட்சித் திருமணத் திட்டப்படி பெரியோர் தலைமையில் நடைபெறுகின்றது. மணம் கொண்ட மக்கள் வள்ளுவர் குறளின் பொருளாய்ந்து வாழ்வில் இன்பம் கொள்கின்றனர்.

வாழ்வின் பயனாக அமிழ்து என்னும் மக்கட்பேறு பெறுகின்றனர். அவர்தம் உயர்நிலை கண்டு முதியோராகிய பெற்றோர் மெத்த மகிழ்ச்சி உறுகின்றனர்.

தமிழ் இலக்கியத்தில் குழந்தைச் செல்வத்தைப் பாடாத கவிஞர்களே இல்லையெனலாம். 'குடும்ப விளக்'கில் குழந்தைச் செல்வம் பாடப்படுகிறது.

குழந்தைகட்குத் தொண்டு

"பிள்ளைகாள்" என்றனள்; பிள்ளைகள் வந்தனர்!
தூய பசும்பொன் துகளினைப் போன்ற
சீயக் காய்த்துகள் செங்கையால் அள்ளிச்
சிட்டுக்காட்டியும் சிறுகதை சொல்லியும்
தொட்டுத் தேய்த்துத் துளிருடல் நலங்காது,
நின்ற திருக்கோலப் பொன்னின் சிலைகட்கு
நன்னீ ராட்டி நலஞ்செய்த பின்னர்
பூவிதழ் மேற்பனி தூவிய துளிபோல்
ஒவியக் குழந்தைகள் உடலின் நீர்த் துளிகளைத்
துடைத்து, நெஞ்சில் சுரக்கும் அன்பை,
அடங்கா தவளாய் அழகுமுத் தளித்தே
பறப்பீர் பச்சைப் புறாக்களே" என, அவர்
அறைக்குள் ஆடைபூண் டம்பலத் தாடினார்! [6]

கற்றறிந்த பெரியோர் முதல் பட்டி தொட்டிகளில் வாழும் பாமரர் வரை இப்பகுதியைப் படித்தால், தம்மை மறந்து சில நிமிடங்கள் இருக்க நேரிடும். புரட்சிக் கவிஞரின் ஒப்பற்ற பாடல் திறத்திற்கு இப்பகுதி ஓர் எடுத்துக் காட்டாகும்.

பள்ளிக்குச் சென்றிருக்கும் குழந்தைபற்றி குடும்ப விளக்கின் தாய் ஆய்கின்றாள்.

பிள்ளைகள் நினைவு

பள்ளிக்குச் சென்றி ருக்கும்
பசங்களில் சிறிய பையன்,
துள்ளிக் குதித்து மான்போல்,
தொடர்ந்தோடி வீழ்ந்தா னோ, என்(று)
உள்ளத்தில் நினைத்தாள்; ஆனால்
மூத்தவன் உண்டென் றெண்ணித்
தள்ளினாள் அச்சந் தன்னை!
தாழ்வாரம் சென்றாள் நங்கை! [7]

---

6. பாரதிதாசன் குடும்ப விளக்கு, பதி. 2, பாரி நிலையம், சென்னை, 1960 பக் 9-10

7. குடும்ப விளக்கு, பக் 12-13

தாய் அன்பின் தனிச்சிறப்பு அவளது சிறந்த இல்லறத் தொண்டில் காணலாம். உண்ணும் உணவிலும் அவரவர்கட்கு விருப்பமான காய்கறிகளைச் சமைக்கும் பொழுது சமைக்கப்பட்ட கறி, காய்களில் அதனை விரும்பி உண்பவர்களின் முகத்தையே அக்கறிகளில் காண்கிருள். சிறிய குழந்தை சப்புக்கொட்டிக் கொண்டு அக்கறியை உண்ணுகின்ற காட்சியைக் காதில் கேட்டும் தாய் பாடுவது கவிஞரின் சிறந்த கவிதைத் திறத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

என்ன கறி வாங்கலாம் ?

கொண்டவர்க் கெதுபி டிக்கும்
குழந்தைகள் எதைவி ரும்பும்,
தண்டுன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்க தென்னை
உண்பதில் எவரு டம்புக் கு
எதுவுத வாதென் றெல்லாம்
கண்டனள், கறிகள் தோறும்
உண்பவர் தம்மைக் கண்டாள் [8]

பிள்ளைகள் உள்ளம் எப்படி?

பொரியலோ பூனைக் கண்போல்
பொலிந்திடும்; சுவைம ணக்கும்
"அருந்துமா சிறிய பிள்ளை?"
எனஎண்ணும் அவளின் நெஞ்சம்.
இருந்தந்தச் சிறிய பிள்ளை
இச்சென்று சப்புக் கொட்டி
அருந்தியே மகிழ்ந்த தைப்போல்
அவள்காதில் ஓசை கேட்கும் [9]

திருமணமாகிப் பல்லாண்டுகள் கழித்துப் பல குழந்தைகளைப் பெற்ற பின்னரும்' குடும்ப விளக்கில்' வரும் தலைவனும் தலைவியும் இன்றைக்கு மணம் புரிந்தோர் என்று சொல்லும்படியாக இருந்தார்களாம். இவ் அழகிய காட்சியைக் கவிஞர் இதோ பாடுகிருர்:

8. குடும்பவிளக்கு. பக். 18
9. ,, பக். 18-19

தலைவி சொன்ன புதுச் செய்தி

அன்றைக்கு மணம்பு ரிந்த
அழகியோன் வீடு வந்தான்;
இன்றைக்கு மணம்பு ரிந்தாள்
எனும்படி நெஞ்சில் அன்பு
குன்றாத விழியால், அன்பன்
குளிர்விழி தன்னைக் கண்டாள்
"ஒன்றுண்டு சேதி" என்றாள்;
"உரை" என்றான் "அம்மா அப்பா
வந்தார்" என் றுரைத்தாள், கேட்டு
"வாழிய" என்று வாழ்த்தி,
"நொந்தார்கள்" என்று கேட்டு
நோயுற்ற வகைய றிந்து
தந்தைதாய் கண்டு" உங்கள்
தள்ளாத பருவந் தன்னில்
நைந்திடும் வண்ணம் நீங்கள்
நடந்திட லாமா?" மேலும்,[10]

தங்கம்

குடும்ப விளக்கின் தொடக்கம் முதல் இறுதிவரை இரண்டறக் கலந்து குடும்ப விளக்காக ஒளிர்ந்து திகழ்பவள் தங்கம். அவளை

துளிஒளி விளக்கின் தூண்டு கோலைச்
செங்காந் தள்நிகர் மங்கை விரலால்[11]

பெரிது செய்து குடும்ப விளக்காக என்றும் ஒளிரச் செய்கின்ற பெருமைக்குரிய பெண்ணைத் தங்கத்தைப் பாவேந்தர் படைத்திருக்கின்றார். தங்கம் தன் கணவனை,

அயலவன் கண்படாமல் காத்த பெருமை[12]

உடையவள், தாய்போல் மாமன் மாமியரைப் புரிந்தவள், தமிழ் நிகர் சுவையுள்ள தணல்நிகர் மாம்பழத்தினும் கொண்டவனின் அன்பு பெரிது என்று கருதிய குலக்கொடி

---

10. பக் 21-22
11. குடும்ப விளக்கு. பக். 1.
12 குடும்ப விளக்கு பக். 1.

பொருளையும் பெரிதென் றெண்ணாள்
பூண் வேண்டாள் தனைம ணந்தோன்
அருளையே உயிரென் றெண்ணும்[13]

அன்பு கொண்டவளாகத் திகழ்பவள், தங்கம்.

விழிப்பதற்கு வேண்டியது கல்வி அல்லவா? வீணர்கள் சிலர் வேண்டாம் என்று விளக்கிடுவரோ? விட்டாரா என்ன அவர்? கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்; திருந்திய கழனி கற்ற பெண்டிர்; நல்ல அறிவுள்ள மக்கள் அங்கேதான் தோன்றுவர்[14] என்று தொடங்கி.

பெண்கட்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணு தற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
மக்களைப் பேணு தற்கே!
பெண்கட்குச் கல்வி வேண்டும்
உலகினைப் பேணு தற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணு தற்கே![15]

எனப் பெண் கல்வியை வேண்டிப் பாடுகின்றார்

அன்றன்று புதுமை!

அன்றிலடி நாமிருவர் பழமும் பாலும்,
ஆருக்கு வேண்டுமேடி! என்றன் ஆசைக்
குன்றத்திற் படர்ந்தமலர்க் கொடியே மண்ணில்
குவிந்திருக்கும் சுவையுள்ள பொருள்கள் எல்லாம்
ஒன்றொன்றும் மறுநாளே பழமை கொள்ளும்;
ஒன்றொன்றும் சிலநாளில் தெவிட்டிப் போகும்
அன்றன்று புதுமையடி, தெவிட்ட லுண்டோ?
ஆருயிரே நீகொடுக்கும் இன்பம் என்றான்![16]

இப்பகுதியில் மேலும் ஒரு சிறப்பும் அமைந்துள்ளது கணவன் வீடு திரும்பியவுடன் இன்முகங் காட்டி அவனை உபசரிக்காமல்,

13. குடும்ப விளக்கு. பக். 1,
14. குடும்ப விளக்கு, பக். 70.
15. மே. கா. நா. பக். 69.
16. குடும்ப விளக்கு. பக் 35.

குடும்பச் செய்திகளைக் கூறுவது முறையன்று; எனவே வீட்டினுள் வந்த கணவனை அன்பு குன்றாத விழியால் வரவேற்று, உபசரித்து, உடனே மாமன் மாமியர் வந்த செய்தியைக் கூறுகிறாள். இவ்வாறு புதிய மரபுவழி பாடிச் செல்வது இப்பழுத்த கவிஞரின் எல்லையற்ற பேராற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

'குடும்ப விளக்கின்' தலைவி கடையில் வியாபாரம் செய்வதை அழகாக எடுத்துரைக்கின்றார்:

இளகிய நெஞ்சத் தாளை
இளகாத வெல்லம் கேட்பார்
அளவாக இலாபம் ஏற்றி
அடக்கத்தை எடுத்து ரைப்பாள்
மிளகுக்கு விலையும் கூறி
மேன்மையும் கூறிச் சற்றும்
புளுகாமல், புகன்ற வண்ணம்
புடைத்துத் தூற்றிக் கொடுப்பாள்[17]

இரவு நேரத்தில் மனைப் பணிகள் அனைத்தையும் முடித்து குழந்தைகளை உறங்கவிட்டுப் பின்னர்க் கணவனுடைய படுக்கையண்டை வந்து நின்றாள் 'குடும்ப விளக்கி'ன் தலைவி, கணவன் உறங்கி விட்டானோ என்று ஐயம் கொண்டு நிற்கின்ற தலைவிக்குத் தலைவன் தான் உறங்கவில்லை என்பதை எடுத்துக்காட்டக் கையாளுகின்ற முறையைக் கவிஞர் மிக அழகாக எடுத்துக்காட்டுகிறார்.

தொண்டையினில் ஒன்றுமே அடைக்கவில்லை
துணைவனவன் சிறுகனைப்பு கனைக்க லுற்றான்
அண்டையிலே மங்கை போய் 'அத்தான்" என்றாள்
அத்தானு தூங்கிடுவான்? உட்கார் என்றான்.[18]

ஒரு நல்ல குடும்பத் தலைவியைத் படைத்துக் காட்டுவதில் உள்ளஞ் செலுத்திய பாரதிதாசன், உலகம் உணர்ந்தவளாக அவளை உருவாக்குவதிலும் வெற்றி பெற்றுள்ளார்.

அதிகாலை தொடங்கிநாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்ப தல்லால்
இது வரைக்கும் பொது நலத்துக் கென்ன செய்தோம்.[19]

17. மே. கா. நா. பக். 26.
18. குடும்ப விளக்கு. பக் .32.
19. மே. கா. நு. பக். 30

எனப் படுக்கையில் கணவனிடம் கேட்கிறார் தங்கம் ஓதும் இந்தத் தலையணை மந்திரம் அவளுடைய பொதுநல வேட்கையைப் புலப் படுத்துகிறது பெண்ணுரிமை பற்றிய தங்கத்தின் பேச்சில் பொறி பறக்க காண்கிறோம்.

நாணிலம் ஆட வர்கள்
ஆணையால் நலிவடைந்து
போனதால் பெண்களுக்கு
விடுதலை போன தன்றோ

எனப் புரட்சிக் குரல் எழுப்புகிறாள்.

பாவேந்தர் அவர்களின் கவிதைத் திறனை நாம் வியக்காமல் இருக்க முடியுமா?

இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை
இரவு போர்த்த இருள் நீங்க வில்லை
ஆயினும் கேள்வியால் அகலும் மடமைமோல்
நள்ளிரவு மெதுவாய் நடந்துகொண் டிருந்தது

என்ற சுவையான தொடக்கத்தைக் கூறாமல் இருக்க முடியுமா?

இரவு வரும் காட்சி இனிதாகக் காட்டப்பெறும் பாடற்பகுதி இது

மேற்றிசைக் கதிர்ப்ப ழத்தை
விருந்துண்டு நீல ஆடை
மாற்றுடை யாய்உ டுத்து
மரகத அணிகள் பூண்டு
கோற்கிளை ஒடுங்தும் புட்கள்
கோட்டிடும் இறகின் சந்தக்
காற்சிலம் பசையக் காதற்
கரும்பான இரவு தன்னைத்
திருவிளக் கேந்தி வந்து
தெருவினில் வரவேற் கின்றாள்.

மேற்றிசைக் கதிர்ப்பழமும், கரும்பின் இரவு, திருவிளக்கு இவற்றில் கட்புல உருக்காட்சிகளைக் கண்டு களிக்கலாம்.

கவிஞர் சிறந்த உவமைகளைப் பயன்படுத்துகின்றார்.

புன்னை இலைபோல புதையடிச் செருப்புகள்[20]

என்றும்,

---

20. பக், 11.

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கி. சந்திரமோகன், பி. ஏ., பி. எல்., அவர்கள்
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்

3. திரு. புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச். டி., அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6. திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை, இயக்குநர், சென்னை.

7. திரு புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., அவர்கள்
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. திரு. புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., அவர்கள்
உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

			உள் நாடு		வெளி நாடு
1.	ஆண்டு வரி	...	20—00	...	030—00
2.	தனி இதழ்	...	02—00		
3.	ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	...	100—00

Regd No. TN/TJ/17.

உ

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

OFFICE OF THE CURATOR
RECEIVED
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

எண் :

திரு. ....

அவர்கள்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	10—00
கட்டுரைப்பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.